அரசு ஊழியர்

செப்டம்பர் 2018

மலர் : 39 இதழ் : 9

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

# பகைவரை நீக்குவோம்

தூங்கும் புலியைப்
பறை கொண்டெழுப்பினோம்!

தூய தமிழரைத்
தமிழ் கொண்டெழுப்பினோம்!

தீக்குறு பகைவரை
இவணின்று நீக்குவோம்!

செந்தமிழ் உணர்ச்சி
வேல்கொண்டு தாக்குவோம்!

**- பாவேந்தர் பாரதிதாசன்**

# “புதிய அத்தியாயம் படைக்க தயாராவோம்!”

“**வா**ழ்க்கை ஒருமுறை, அதை மற்றவர் களுக்காகவும் வாழ்ந்து காட்டப் பழகிக் கொள்ள வேண்டும்”.

ஆம். “தேசத்தில் ஜனநாயகத்தை நசுக்கத் துடிக்கும் சக்திகள் தலையெடுக்கத் தொடங்கி யுள்ளன. இன்னொரு நெருக்கடி நிலை எப்போதும் வரக்கூடும்”.

22 ஆண்டுகளுக்குப் பின் 1991-ல் கொண்டு வரப்பட்ட தாராளமயம், தனியார்மயம், உலகமயம் எனும் முக்கொடுங் கொள்கைவழிப் பாதை மீண்டும் தனியார்மயத்தை நோக்கி நிதித் துறையையும், அரசுத் துறைகளையும், பொதுத் துறைகளையும் நகர்த்தத் தொடங்கியுள்ளது என்பது மிகுந்த கவலையளிக்கக் கூடியதாக உள்ளது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து பல லட்சம் பேர் அரசுத் துறையில் பணியில் சேர வழிவகுத்த சமூக நீதி இன்று மறுக்கப்படுகிறது.

போராடிப் பெற்ற உரிமையான ஓய்வூதியத்தை ஒட்டுமொத்தமாக நவீனமயம் என்ற தந்திரத்தால் அழிக்கப் பார்க்கிறார்கள். கொத்தடிமை கூலியில் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர், கிராம உதவியாளர் மற்றும் தொகுப்பூதியம், மதிப்பூதியம் என்ற நிலையில் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

பல லட்சம் காலிப் பணியிடங்களை வைத்துக் கொண்டு படித்த இளைஞர்களையும், வேலை யில்லா பட்டதாரிகளையும் ஏமாற்றும் வித்தைகள் தொடர்கின்றன. அரசாணை 56 என்ற பெயரில் அரசுத் துறையில் உள்ள காலியிடங்களையும் காவு கொடுக்க பார்க்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்பு அளித்துள்ள ஜனநாயக போராட்டங்களை தீவிரவாத செயலாகவும், போராளிகளை தீவிரவாதிகளாக வும் சுட்டுத் தள்ளுகிறார்கள்.

ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், பேரணி, தர்ணா, காத்திருப்புப் போராட்டம் போன்ற போராட்டங்களுக்கு கடுமையான நெருக்கடி

என்பது காவல் துறை மூலம் ஏவிவிடப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊதிய மாற்றம் செய்வதில்கூட, தனது ஊழியர்கள் என்ற உணர்வற்ற அரசாகவும், ஒரு அந்நிய எஜமானன் போல் முதல்வர் காட்டிக் கொள்வதும், கண்ணியமற்ற முறையில் பேசுவதும் எக்காலத்திலும் இல்லாமல் இக்காலத்தில் நிகழ்ந்துள்ளது.

தவறான பொய் பிரச்சாரத்தை மேற்கொண்டு நமக்கும், பொது மக்களுக்குமான இடை வெளியை அதிகரிக்க முயற்சிக்கிறார்கள்.

மாவட்ட ஆட்சியர் முதல் அரசு செயலாளர்கள் வரை ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டு தங்கள் ஊழலை மறைத்து, ஊழியர்களின் நலனை கபளீகரம் செய்கிறார்கள்.

காவல் துறையோ கண்ணில் கறுப்புத் துணியை கட்டிக் கொண்டு கண்டபடி வேட்டை யாடும் போக்கும் நிகழ்ந்து வருகிறது. கல்வி, விவசாயம், இளைஞர் நலன், பொருளாதாரம், வணிகர் நலன், தொழிலாளர் நலன், வேலை வாய்ப்பின்மை என்று எதைப் பற்றியும் கவலைப்படாத அரசுகளாக உள்ளன தமிழக அரசும், மத்திய அரசும்.

இத்தனைக்கும் இடையில் நீதிமன்றம் பட்டும் படாமல் தனது மேலாண்மையை என்றும்போல் நிலைநிறுத்திக் கொள்கிறது.

மொத்தத்தில் ஜனநாயகத்தை நசுக்கும் கூட்டம் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. சில தடைகளை மீறித்தான் ஜாக்டோ-ஜியோ என்ற பேரமைப்பு போராடி ஊதிய மாற்றம் பெற்றுள் ளோம். இளைஞர்களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிக்கும் அரசாணை எண். 56-ஐ நீக்கம் செய்ய மக்களோடு மனித சங்கிலியாய் இணைந்துள்ளோம்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற 31,000 போராட் டங்களை நேர்மைத் திறனுடன் சந்திக்க தயாராக இல்லாத தமிழக அரசும், முதல்வரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக தொழிலாளர் நலச் சட்டங்களில் திருத்தம் செய்து, தொழிலாளர் களுக்கும், மக்களுக்கும் எதிராக செயல்படும் பிரதமருடன் கைகோர்த்துக் கொண்டு ஜனநாயகத்தை நசுக்கத் துடிக்கும் சக்திகளாக மாறி வருகிறார்கள். இதே நிலை தொடர்ந்தால் இன்னொரு நெருக்கடி நிலை வருவதற்கு வாய்ப்புள்ளது.

1975-ல் நெருக்கடி நிலை வந்தபோது, அந்த நெருக்கடி நிலையை கொண்டு வந்த அரசே வெளியேறு என்ற கோஷத்தை முன்வைத்தோம். அதன்பிறகு தலை தூக்காமல் இருந்த நெருக்கடி, இன்று மீண்டும் பல்வேறு வடிவங்களில் வந்து கொண்டிருக்கிறது. நமது வீறுகொண்ட போராட்டங்களின் மூலம் இத்தகைய சக்திகளை ஆட்சியை விட்டு துரத்துகிற நேரம் வந்துவிட்டது.

ஜனநாயகத்தை பாதுகாத்து அரசு ஊழியர் களுக்கும், ஆசிரியர்களுக்கும், தொழிலாளர்களுக் கும், பொதுமக்களுக்கும் போராடிப் பெற்ற உரிமைகளை மீட்கவும், புதிய உரிமைகளை பெற்றிடவும், ஜனநாயகத்திற்கு எதிராக செயல்படும் மத்திய, மாநில ஆட்சியாளர்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவதற்கு நாம் திட்டமிடும் அனைத்து போராட்டங்களையும் மிக சக்தியாக நடத்தி, தமிழகத்தில் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் புதிய அத்தியாயம் படைக்கத் தயாராவோம்! ❖

## கட்டணமில்லா டிஎன்பிஎஸ்சி வகுப்பு

கடலூர் மாவட்டம் சார்பாக டி.என்.பி.எஸ்.சி. குரூப்-2க்கான இலவச பயிற்சி வகுப்பிற்கான துவக்க நிகழ்ச்சி 25.8.2018 அன்று காலை 11 மணியளவில் தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத் தில் மாவட்டத் தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளரும், பயிற்சி மைய ஒருங்கிணைப் பாளருமான என்.ஜனார்த்தனன் துவக்கவுரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் வரவேற்றார்.





# சின்ன தீக்குச்சிக்குத் திண்ணக் கொடுப்போம், ஆரசாணை எண்.56ஜே!

**த**மிழகத்தில் நிலவும் தற்போதைய அபாயகரமான சூழ்நிலை "மக்கள் நலன்'' என்ற வார்த்தைகளை "அழிந்து போன இனங்கள்'' பட்டியலில் சேர்ப்பதற்கான நடவடிக்கையின் உச்சகட்டமாக மாறிவருகிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாக்கியம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. நம்மைச் சுற்றியுள்ள நச்சுக்கொடிகளை நாம் கவனிக்காமலேயே அன்றாட அரசியலில் முடங்க ஆரம்பித்து விட்டோமோ என்ற கவலை இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகளை உற்று கவனிப்பவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசாங்கம் ஆட்சி செய்தால் மக்கள் நிலை என்னவாகும் என்பதற்கு இந்த ஆட்சி ஒரு நல்ல உதாரணம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராக இருந்தவர்கள் எவரும், இந்த மாநிலத்திற்கென பிரத்தியேகமாக இருந்த பல விஷயங்களை விட்டுக் கொடுக்காமல் காத்து வந்தார்கள். சில விஷயங்களை காக்க முடியாவிட்டாலும் தங்களின் எதிர்ப்புகளை பதிவு செய்தார்கள். சமூக நீதியைக் காக்க கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்று காணாமல் போகின்ற நிலையில் இருக்கின்றன. நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு என்பது கையிலிருந்து நழுவிய கண்ணாடிக் குவளையாகிப் போனது. மருத்துவ மேற்படிப்பு மாணவர்கள் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு பணி செய்தால் அவர்களுக்கு மேற்படிப்பில் கொடுக்கப்பட்டு வந்த 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான கதவுகளும் இழுத்து மூடப்பட்டுள்ளன. தமிழக அரசு அலுவலகங்களில், பாலிடெக்னிக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களுக்கென இருந்த இடஒதுக்கீடு இப்போது எல்லோருக்குமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. அரசுத் துறைகளில் காலியாக விடப்பட்ட பணியிடங்கள் பல வருடங்களாகியும் நிரப்பப்படவில்லை. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான மத்திய அரசின் ஏழாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் பல அளப்பரிய போராட்டங்களுக்குப் பின்னர் நீதிமன்ற தலையீடு காரணமாக 21 மாத நிலுவை பிடித்துக்கொண்டு வழங்கப்பட்டுள்ளது. நாள்தோறும் வரும் அறிவிப்புகளும் அறிக்கைளும் அரசு நிர்வாகத்தில் 'முதல்வரின் இதயம்' என்ற ஏழை எளிய மக்களுக்கான சலுகைகள் கழற்றப்பட்டுவிட்டு அந்த இடத்தில் 'அதிகார வர்க்கத்தின் மூளை' பொருத்தப்பட்டுள்ளது.



வந்து போனவர்கள் எல்லாம் லஞ்ச லாவண்யம் செய்து தின்று தீர்த்தபின்னர் கொஞ்ச நஞ்ச பணம் கூட கஜானாவில் இல்லை என்று பஞ்சப்பாட்டு பாடும் அரசாங்கங்கள் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் தீர்த்துக்கட்ட நினைப்பது மக்கள் நலத் திட்டங்களையும், சலுகைகளையும் மற்றும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளங்களையும்தான்.

அரசு தனது நிர்வாகத்தில் சிக்கன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நினைத்தால் ஐஎஎஸ் அதிகாரிகள் போட்டுக் கொடுக்கும் இடம் அரசு அலுவலகங்கள்தான். அரசு நிர்வாகம் செவ்வனே நடந்த அரசுகளில் அதன் ஊழியர்கள் கௌரவமாக வைக்கப்பட்டிருந்தார்கள். மக்களுக்கான ஆட்சி நடத்திய முதல்வர்கள் தங்களுக்கும் மக்களுக்குமான பாலமாக அரசு ஊழியர்களைப் பார்த்தார்கள். குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் அரிசி முதல் முதியோர் உதவித் திட்டம் வரை எந்தத் திட்டமும் வெற்றிகரமாக நடக்க அரசு ஊழியர்கள் முன் நின்றார்கள். அரசின் திட்டங்களை கடைக்கோடி கிராமத்திற்கும் கொண்டு சேர்க்கும் சேவை தூதர்களாக அரசு ஊழியர்கள் இன்று வரையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும் இயற்கைப் பேரிடர்களிலும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கையை சேவையாகப் பார்க்காமல் ஒரு அரசாங்கம் செலவாகப் பார்க்கும் என்றால் அந்த அரசாங்கத்திடம் இதயம் என்ற ஒன்று இல்லை என்றுதான் அர்த்தம். தங்கள் கணக்குப் புத்தகங்களில் லாபக் கணக்குகளை எட்டுவதற்காக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப் பக்கங்களை கிழித்துப் போட அரசாங்கங்கள் நினைப்பது இரக்கமற்ற அரக்கக் குணமாகும்.

மேசையிலிருந்து...

அரசியல்வாதிகளும், அதிகார வர்க்கமும் மக்களின் மறதியை மூலதனமாகப் பார்க்கிறார்கள். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி விட்டால் அடுத்து வருகிற நான்கு ஆண்டு களுக்கு அவர்கள் மக்களைப் பற்றிய சிந்தனையோ, அக்கறையோ கொள்ளத் தேவையில்லை என்கிற சிந்தனை அரசியலின் மூலதனமாக்கப்பட்டிருக்கிறது. எதிர்கட்சியோ ஆளுங்கட்சியோ எந்தக் கட்சி வந்தாலும் விலைவாசிகளோ விட்டுப்போன சலுகைகளோ திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பதை மக்கள் புரிந்து கொண்டார்களோ இல்லையோ அரசியல்வாதிகள் நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். 2003ஆம் ஆண்டில் புதிய ஓய்வூதியத் திட்டம் தமிழகத்தில் வந்தபோது அதை எதிர்த்த கட்சி 2006 தேர்தலில் அரியணை ஏறிய போது அதைப்பற்றி கண்டுகொள்ளவில்லை. 2003ல் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்திய கட்சி 2011 தேர்தல் நேரத்தில் மீண்டும் ஆட்சி அமைத் தால் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதாக அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களை யும் ஏமாற்றி வாக்கு பெற்றது.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார் வசத்திடம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகளி லிருந்தும் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றன. அரசாங்கம் என்ற சேவை மையம் தனியார்மயம் என்ற லாபமயத்திடம் அடகு வைக்கப்பட்டு விட்டது. அதன் விளைவுகள் தான் அரசாங்கப் பணிக்கு ஆட்களை எடுப்பதற்கு ஐந்து ஆண்டுகள் தடை, காலியாக உள்ள பணி யிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுவது. இனிமேல் எல்லா வேலைகளுக்கும் அவுட்சோர்சிங் மூலம் ஆட்களை நியமிப்பது போன்ற அதிரடி மாற்றங்களை நோக்கி அரசாங்கம் பயணிப்பதற்கான காரணம். இதன் விளைவு இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் என்பதை நன்கறிந்தும் தமிழக அரசாங்கம் பிரைவேட் லிமிடெட் கம்பெனியைப் போல் நிர்வாகத்தை 'அமர்த்து - துரத்து' என்ற ஷரத்துக்களின்படி நடத்த ஆரம்பித்துள்ளது.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் புதிய ஓய்வூதியத் திட்டம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதி யமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத் துறைகளையே தனியார்வசம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன் விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் கணிக்க தவறி யுள்ளது என்பதைவிட கண்மூடிக்கொண்டுள்ளது என்பதே சரியானதாக இருக்கும்.

அரசு நிர்வாகத்தை அரசு ஊழியர்களைக் கொண்டு ஓரளவுக்கேனும் லாபகரமான முறையில் நடத்தவும் ஏழை, எளிய மக்களுக்கு கௌரவமான ஒரு பாதுகாப்பை அளிக்கும் தாய் போல நிர்வகிக்கவும் தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது என்பது திரும்பத் திரும்ப வலியுத்தப்பட்டு வந்தபோதிலும் அரசாங்கம் வட்டிக் கடை முதலாளி போல் நடந்து கொள்ள ஆரம்பித்துள்ளது சமூக அக்கறையும், மக்களுக்கான அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நடுநிலைவாதிகளையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

அரசாங்க வேலைக்கு ஆள் எடுக்கத் தடை, காலிப் பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டு விடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது. தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர் களை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டி விடுதல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறை யில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்டலுக்குப் பின்னர் தமிழக அரசு பெரும் பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக் கும் முடிவுக்கு வந்துள்ளதை 2017 அக்டோபர் மாதத்தில் தமிழகஅரசு வெளியிட்ட அறிக்கை (செய்தி வெளியீடு எண்.678 நாள் 11.10.2017) சூசகமாக உணர்த்தியது.

> "அரசின் வருவாய் இனச் செலவினங் களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ள தக்க பரிந் துரைகளை அளித்திட "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff Rationalization Committee) உருவாக்கப்படும்''

இந்த அறிவிப்பு அரசுப் பணிகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட சாணை தீட்டப்படும் கத்தி என்றும் இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவித்து, மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த ஏற்பாட்டை தவிர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் வைத்தது.

சமூக அக்கறை உள்ளவர்களும், மக்கள் நலத் திட்டங்களை மதிப்பவர்களும் இதுபோன்ற ஆட்குறைப்பு துறைஒழிப்பு நடவடிக்கைகளால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும், மக்கள் நலன் சார்ந்த துறைகளும் திட்டங்களும் அரசின் வசமே இருக்க வேண்டும் என்றும் அரசு வேலை வாய்ப்புக்களை நம்பியுள்ள இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்து விடும் என்றும் அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டினர், கோரிக்கைகள் வைத்தனர். ஆனால் அரசோ அடிமைசாசனம் எழுதிக் கொடுத்துவிட்ட தலையாட்டி பொம்மையாக எதைப் பற்றியும் கவலைப்படாமல் அடுத்தடுத்த நகர்வுகளில் அடியெடுத்து வைத்தது. அதன் எதிரொலிதான் இத்தனை பெரிய எதிர்ப்புகளுக்கும் இடையில் அரசாணை எண்.56 மூலமாக ஆதிஷேசய்யா கமிட்டி தமிழக அரசு அமைத்துள்ள நிகழ்வு.

இதன் நீட்சியாக தமிழக அரசு 26.06.2018ஆம் தேதி செய்தி வெளியீட்டு எண்.409 மூலம் “ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித மேலாண்மைத் திட்டம்” என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டது. இதன்படி தற்போது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணு வழி ஓய்வூதியம், நிதி மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன்மூலம் கருவூலத் துறையை அரசுத் துறையி லிருந்து கழற்றிவிடும் ஏற்பாடு துவங்கி விட்டதை உணர முடியும்.

இந்த ‘ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்’ என்ற வாசகத்தின் அகராதி விளக்கம் என்பது ஊழியர் பணியிடங்களை காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி அதை தனியார்வசம் ஒப்படைத்து விடுவதாகும். மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு எதிராக... அரசாங்கத் தின் நடவடிக்கைகள் உள்ளன என்பது அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகளும் அரசின் முடிவுகளும் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன.

சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத் தினருக்கும், அரசியல் வாதிகளுக்கும், ‘‘மக்கள் நலன்” என்ற வார்த்தையின் உள்ளார்ந்த அர்த்தம் புரிய வில்லை என்பதைவிட புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் நினைப்பதுதான் இதன் பொருள். இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தது போல் தற்போது அரசு அலுவலகங்கள் இல்லை. புதிய பொருளாதார திட்டம் என்ற திட்டம் எல்லா மக்களும் எல்லாமும் பெற வேண்டும் என்ற சமத்துவ சித்தாந்தத்தை சுக்குநூறாக்கி யார் எப்படி போனால் என்ன, மக்களின் சுமைகளையும் நலன்களையும் அரசு ஏற்கக்கூடாது என்கிற வேதாந்தத்தை விதைத்தது. அதுதான் கொஞ்ச கொஞ்சமாக செயல் வடிவம் பெற்று மக்கள் நலன் பொதுசேவை எல்லாவற்றையும் ஏப்பம் விட்டுவிடும் அரக்கனாக உருமாறியிருக்கிறது. ஒரு சில அமைப்புகள் மட்டும் இதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டே யிருக்கின்றன. தொலைதூரப் பார்வையில் பார்க்கும் போது இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தால், மக்கள் நலனும், உதவும் உள்ளமும், சேவை மனப்பான்மையும் முற்றிலுமாக ஒழிந்து, நாடு முழுவதும் காட்டுமிராண்டித்தனமே நிறைந்து நிற்கும்.

எந்த ஒரு அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும் அங்கு பல இருக்கைகள் காலியாகவே காணக்கிடப்பது கண்கூடே. ஓய்வுபெற்றுச் சென்றவர்கள், பணியிட மாற்றம் சென்றவர்களின் இடங்கள் அப்படியே விடப்பட்டிருப்பதும் இன்று வரை தொடர்கிறது. இது ஆண்டுதோறும் அதிகரித்து அதிகரித்து தற்போது பெரும்பாலானஅரசு அலுவலகங்களில் மூன்று அல்லது நான்கு அரசு ஊழியர்களின் வேலையை ஒரு ஊழியரே பார்க்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது. எல்லா அரசுத் துறை சங்கங்களிலிருந்தும் எழும் கோரிக்கைகளில் நிரந்தர இடம் பிடித்துவிட்ட கோரிக்கையாக காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது தற்போது கோரிக்கையாக இல்லாமல் ஓலமாக மாறியுள்ளது. 2001 முதல் 2005 வரை அரசுத் துறைகளில், ஆசிரியர் பணியிடங்களில் எந்த ஊழியரும் சேரமுடியாத வகையில் பணி நியமனத் தடைச் சட்டம் அரசுப் பணிகளை முடக்கி விட்டது. மக்கள் சேவை செய்யக்கூடிய அரசு அதிகாரிகள் இல்லாமல் மக்கள் நலத்திட்டங்கள் எப்படி அவர்களுக்குப் போய்ச்சேரும்? ஊழியர்களை நியமிக்காமல் அரசு காலியான பணியிடங்களை நிரப்பாமல் விட்டதன் மூலம் அரசு ஊழியர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்கிற தீராப் பழியை அரசு ஊழியர்கள் மீது மக்களுக்கு இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. போதுமான ஊழியர்கள் இல்லாமல் அரசின் திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அனைத்து துறைகளில் ஊழியர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆக, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் நோக்கம் எந்தெந்தப் பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை மட்டும் அரசின் வசம் விட்டுவைக்கலாம் என்பதானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, அவற்றை தனியார் மயமாக்குவதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை.

கணக்கு கருவூலத்துறையை டிஜிட்டல் மயமாக்கு வதன் மூலமாக இனி அரசு ஊழியர்களின் பணிப் பதிவேடுகள் பொது ஆவணமாக மாற்றப்படும். இதனால் ஒவ்வொரு அரசு ஊழியரின் தனிப்பட்ட அடிப்படை உரிமை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. சம்பள பட்டியல்களை, வருகைப் பதிவேடுகளை மின்னணு தொழில் நுட்பத்திற்குள் கொண்டு சேர்க்குமுன் அதற்கு உண்டான அடிப்படை கட்டமைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் அதை இவ்வரசு செய்யவில்லை. டிஜிட்டல் தொழில் நுட்பத்தை அரசு ஊழியர்களுக்கு கற்றுக்கொடுக்காமல் அதை அப்படியே ஒப்பந்த முறையில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொடுக்கும் ஏற்பாடானது இனிமேல் இந்தப் பணியிடங்கள் நீக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிகுறியாகும். இந்த ஏற்பாடு, அரசு ஊழியர்களால் இந்த வேலை களை செய்யமுடியாது என்று அவமானப்படுத்தும் செயலாகும். ஏற்கெனவே ஆதார் விவகாரத்தில் தனிமனித உரிமைகளை பாதிக்கும் வகையில் உள்ளதாக உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ள நிலையில் கருவூல கணக்குத்துறையில் இப்போது கொண்டுவரக்கூடிய மாற்றம் என்பது அரசு இயந்திரத்தை தனியார் வசம் ஒப்படைக்கும் ஏற்பாடாகும். ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை, அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும் என்று நாம் போராடி வரும் நிலையில் இதுபோன்ற செயல்கள் அரசு நிரந்தரப் பணியிடங்களையே இல்லாமல் செய்துவிடும் என்பது அரசு ஊழியர் களுக்கு அடிக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கை மணியாகும். தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு தமிழக மாணவர்கள் இளைஞர்களின் நலன்களும் வேலை வாய்ப்பு வசதிகளும் பாதிக்காத வகையில் வேலை வாய்ப்பு பெறுவதை உறுதி செய்ய வேண்டும். அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பது மட்டுமல்ல இளைஞர்களின் எதிர்காலம் நாட்டின் வருங்காலம் போன்றவைகூட தீவிரவாதம், பயங்கரவாதம், ஆயுதவாதம் போன்ற சாத்தான்கள் கையில் சிக்கி விடும் பேரபாயத்தை ஏற்படுத்திவிடும் என்பதை உணர வேண்டும். வேலை வாய்ப்பின்மை என்பது அந்தந்த தனிப்பட்ட இளைஞனின் பிரச்னை அல்ல, அது சமூகத்தின் பிரச்னை என்பதை கவனிக்காமல் விட்டுவிட்டால் அது புலிவாலை பிடித்த கதையாக மாறிவிடும்.

வேலையின்மையும், வறுமையும் இங்கு வாழும் மக்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கிவிடும் என்பதை ஆட்சி செய்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி வேலை தேடி கிராமங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 13.90 கோடி. இப்படி செல்பவர்களைப் பற்றிய எந்த தகவல்களும் அரசாங்கத்தால் பதிவு செய்யப்படுவதில்லை. இத்தகைய நாடோடி வாழ்க்கைக்கு உந்தப்பட்டவர்களுக்கு வாக்குரிமை, குடும்ப அட்டை, இவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உரிமை, மருத்துவமனையில் சிகிச்சை பெற காப்பீடு வசதி எதுவும் கிடையாது. அரசாங்கம் வகுத்துள்ள குறைந்தபட்ச ஊதியம், கண்ணியமான வாழ்க்கைக்குரிய உத்தரவாதம் பணிக்கொடை, தொழிலாளர் காப்புறுதி சட்ட பாதுகாப்பு போன்றவைகூட இவர்களுக்கு கிடைப்பதில்லை.

இந்த நிலை தொடர்ந்தால் எந்தவித அங்கீகாரமும் தராமல் உழைப்பை மட்டும் சுரண்ட அனுமதிக்கும் மாநில அரசுகள் இவர்களை சட்டவிரோத குடியேறி களாகவே அடையாளப்படுத்தும். உரிமைக்காக இவர்கள் போராடினால் குற்றவாளிகள் என்ற முத்திரை குத்தப்படுவார்கள். புதிய இடங்களில் இவர்களுக்கு வாக்குரிமையும் கிடையாது என்பதால் எந்த அரசியல் கட்சியும் இவர்களுக்கு பரிந்து பேச முன்வராது. பிறப்பால் இந்தியர்கள் என்றாலும் வயிற்றுப் பிழைப்புக்காக இவர்கள் கொத்தடிமை களாக, அரசாங்கங்களே மாற்றுவதற்கான ஏற்பாடே அரசுத் துறைகளை தனியார் வசம் ஒப்படைப்பதும், இந்த நாட்டில் படித்த இளைஞர்கள் இந்த நாட்டிலேயே வேலை வாய்ப்புகளை பெறமுடியாமல் போவதும், இங்கு அரிதாக ஏற்படும் வேலை வாய்ப்பைக்கூட வெளி மாநிலத்திலிருந்து வரும் இளைஞனுடன் போட்டியிட்டு பெறும் சூழ்நிலையும் அரசாணை எண்.56 ஏற்படுத்திவிடும் என்ற அக்மார்க் உண்மையை அனைவரும் உணரும் வகையில் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் மாவட்டத் தலைநகரங் களில் 21.8.2018 தேதி மனித சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் அரசாங்கம் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாமல் அடுத்தடுத்த

அரசுத் துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. இதை நாம் இப்போது எதிர்க்காவிட்டால் நாமும், நமது சந்ததி களும், மக்களும் சொந்த நாட்டிலேயே அடிமைகளாகி விடுவோம். அரசாணை எண்.56ன் உண்மையாக அர்த்தம், அரசாங்கத்தை தனியார்வசம் என்ற கிழக்கிந்திய கம்பெனிகளிடம் ஒப்படைக்கும் ஏற்பாடே என்பதை அனைவரும் உணர வேண்டும். இதை மக்கள், மாணவர்கள், இளைஞர்கள் அனை வருக்கும் நாம் உணர்த்த வேண்டும். தனியார்மயம் என்ற கிழக்கிந்திய கம்பெனிகள் நம்மை அடிமை யாக்கும் முன்பு நாம் இன்னொரு சுதந்திர போராட் டத்திற்கு தயாராக வேண்டும். வெள்ளையனை வெறியேற்றி பெற்ற சுதந்திரம் சொந்த நாட்டிலேயே நம்மை அடிமையாக்கப் பார்க்கும் கொள்ளையர்களை விரட்டியடிக்கும் இன்னொரு சுதந்திர போராட் டத்தின் ஆரம்பமாக இருக்கட்டும். அரசாணை எண்.56ஐ சின்ன தீக்குச்சிக்கு நாம் திண்ணக் கொடுத்து அரசுக்கு எச்சரிக்கை விடுப்போம். தீக்குச்சியிலிருந்து தீக்கொழுந்து எரியட்டும், உள்ளும், வெளியும், எங்கெங்கும்!

❖

## வட்டப்பேரவை கூட்டங்கள்

‘எண்ணிய முடித்தல் வேண்டும்’ என்ற பாரதியின் கூற்றுக்கேற்ப, மாநிலப் பேரவை முடிவு பெற்றவுடன், சிவகங்கை மாவட்டத்தில் விடுபட்ட ஒரே வட்டக்கிளையான, மானாமதுரை வட்டப்பேரவையின் கூட்டத்தை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக கூட்ட வேண்டும் என எண்ணியிருந்தோம்.





அதன்படி, 11.08.2018 அன்று காலை 11.00 மணியளவில், மானாமதுரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், வட்டப் பேரவை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வட்டக் கிளைத் தலைவர் த.புவனேஸ்வரன் தலைமை தாங்கினார். கிளைச் செயலர் மாரிமுத்து, பொருளாளர் செந்தில்குமார் ஆகியோர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். மாவட்ட செயலர் ஆ.தமிழரசன், மாவட்டத் துணைத் தலைவர் ஜேக்கப் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். சப்பாணிமுத்து, சின்ன அழகர், திராவிடச் செல்வி ஆகியோர் வாழத்தி பேசினர். பேரவையில் கீழ்க்காணும் நிர்வாகிகள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக சின்ன அழகர், செயலாளராக பிச்சை, பொருளாளராக முனீஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினராக செந்தில்குமார் ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். வட்டச் செயற்குழு உறுப்பினர் காளிமுத்து நன்றி கூறினார்.

❖

## மதுரையில் பாராட்டு விழா

ஜூலை 21,22 ஆகிய நாட்களில் 14 வருடங் களுக்குப் பிறகு நமது சங்கத்தின் மாநில பிரதிநிதித் துவப் பேரவை மதுரையில் நடைபெற்றது. இப்பேரவை சிறப்பாக நடைபெற காரணமாய் அமைந்த வரவேற்புக் குழுவின் நிறைவு நிகழ்ச்சி மதுரை அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் ஆகஸ்ட் 22 அன்று நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மாவட்ட துணைத் தலைவர் த.ராமமூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவரும் வரவேற்புக் குழு செயலாளருமான சு.ராஜாராஜேஸ் வரன் பேரவை சிறப்பாக நடைபெற கடுமையாக உழைத்திட்ட அனைவரையும் நினைவு கூர்ந்தும் வாழ்த்தினார். மாநிலத் துணைத் தலைவர்கள் சு.பார்த்திபன், மொ.ஞானத்தம்பி, ந.குமரவேல் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாநிலத் தலைவர் எம்.சுப்ரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வாழ்த்தி பேசினர். பேரவைக்கு பாடுபட்ட அனைவருக்கும் மாநில நிர்வாகிகள் கௌரவப் படுத்தினர். பேரவை சிறக்க கடுமையாக பாடுபட்ட மாநில துணைத் தலைவர் ஆ.செல்வம் அவர்களுக்கு மாநில மாவட்ட நிர்வாகிகள் சார்பாக நினைவு பரிசு வழங்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா நன்றி கூறினார்.

❖

# "கொடையால் குடை விரித்து கேரள மக்களின் துயர் துடைப்போம்"

என்னதான் மனிதன் அறிவியல் தொழில் நுட்பங்களில் வெகுவாக முன்னேறியிருந்தாலும், இயற்கைச் சீற்றங்களையும், அவற்றால் ஏற்படக்கூடிய பேரிடர்களையும் துல்லியமாக அறிந்து, மனித இழப்புகளை தவிர்க்க முடியாத சூழல்தான் இன்னும் உள்ளது. கேரள மாநிலத்தில் பெய்துவரும் கனமழையால் அம்மாநிலமே நீரில் தத்தளிக்கிறது. அம்மாநிலத்தில் உள்ள அணைகள் அனைத்தும் நிரம்பி கிட்டத்தட்ட 37 அணைகளை உடனடியாக ஒரே நேரத்தில் திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு அதன்காரணமாகவும் சில உயிரிழப்புகள் அங்கே தவிர்க்க முடியாததாகியிருக்கிறது. மழையின் சீற்றத்தை, அது ஏற்படுத்தியிருக்கும் விளைவுகளை கணிப்பதற்கு முன்பே இரண்டாவது சுற்று ஊழித்தாண்டவத்திற்கு மழை தயாராகிவிட்டது. இந்த இயற்கை சீற்றத்தால் கேரள மாநிலம் மிகுந்த இழப்புகளுக்கு ஆளாகியுள்ளது. நாடெங்கிலும் இருந்தும், அங்கு அல்லல்படும் மக்களுக்காக பல்வேறு மாநில அரசாங்கங்களும், பிரபலங்களும், தனிநபர்களும் நிதியுதவிகளை செய்து வருகின்றனர். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியான உதவிகளை செய்வதோடு மட்டுமல்லாமல், மருத்துவ வசதிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இதுபோன்ற பேரிடர்கள் ஏற்பட்டபோது கேரள அரசாங்கமும், அங்குள்ள தொண்டு நிறுவனங்களும் நமது மக்களுக்கு செய்த நிவாரண உதவிகளை நாம் மறந்துவிட முடியாது. 'வர்தா', 'ஒக்கி' போன்ற புயல்களே இதற்கு உதாரணம். அதேபோல சிபிஎஸ்ஈ அமைப்பு இந்த ஆண்டு 'நீட்' தேர்விற்காக தமிழகத்து மாணவர்களுக்கு கேரளாவில் தேர்வு மையங்களை ஒதுக்கி அதிர்ச்சி அளித்தபோது, கேரள அரசாங்கமும், அங்குள்ள சமூக ஆர்வலர்களும் கேரளாவிற்கு சென்ற தமிழக மாணவர்களை அவர்களின் தேர்வு மையங்களுக்கே இலவசமாக அழைத்துச் சென்று, மாணவர்கள் தங்கள் தேர்வினை உறுதியுடன் எழுத உதவி புரிந்ததை தமிழகத்தின் பெற்றோர்கள் அனைவரும் நன்றியுடன் பார்த்ததையும் இந்நேரத்தில் நாம் நினைவுகூறுவது அவசியமாகும்.

இத்தகைய சூழ்நிலையில், பக்கத்து மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இந்தத் துயருக்கு நாம் நம்மாலான உதவிகளை செய்வதே மனிதநேயம் மிக்க செயலாக இருக்கும். நமது மாநில முதல்வர், அரசியல் கட்சியினர், சினிமா நடிகர்கள், நடிகைகள், சமூக ஆர்வலர்கள், தொழிற் சங்கங்கள் என பலரும் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட கேரள மாநில மக்களுக்கு உதவி வரும் நிலையில், அரசு ஊழியர்களாகிய நாமும் நம்மாலான உதவிகளை செய்வதே இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்களுக்கு பேருதவி செய்ததாக இருக்கும். நம்முடைய நிதி உதவியோ, பொருளுதவியோ சிறிதாக இருந்தாலும் அதை முழுமனதோடு செய்வோம். 'இடுக்கண் களைவதே நட்பு' என்ற குறள் மொழிக்கு ஒப்ப, தமது உடைமைகளையும், உறைவிடங்களையும், உறவுகளையும் இழந்து உணவுக்காக தவிக்கும் கேரள சகோதர, சகோதரிகளின் பசியாற்றவும், பிணி போற்றவும் பொருட்களாகவோ, மருந்துகளாகவோ, தொகையாகவோ அனுப்பி அவர்களின் கண்ணீருக்கு கைகுட்டையாக இருப்போம்.

ஆகவே, தோழர்களே! கேரள மக்களின் துயரில் நாமும் முழுமனதோடு பங்கு கொண்டுள்ளோம் என்பதை அனைவருக்கும் உணர்த்தும் வகையில், அரிசி, பருப்பு, இதர உணவு பொருட்களை கொடுக்க முன்வருவோரை நன்றியுடன் நாம் அழைக்கிறோம். உணவுப் பொருட்களை வழங்க முன்வருவோர் அவற்றை நாகர்கோவிலில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளிடம்

ஒப்படைத்து உரிய ரசீதுகள் பெற்றுக் கொள்ளுமாறும், அங்கு நேரடியாக அனுப்ப முடியாதவர்கள் அவர்கள் இருக்கும் ஊர்களின் அருகாமையில் இருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அலுவலகத்தினை தொடர்பு கொண்டு அங்குள்ள நிர்வாகிகளிடம் கொடுத்து உரிய ரசீதுகளை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம். நிதி உதவி கொடுக்க விழைபவர்களை நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கிறோம். அவர்கள் தாங்கள் செலுத்த விரும்பும் தொகையை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையம், திருவல்லிக்கேணி சென்னை-5 முகவரிக்கு காசோலையாகவோ, வரைவோலை யாகவோ அல்லது வலைதள மாற்று (Net Transfer) மூலமாகவோ செலுத்த வேண்டுகிறோம். வலைதள மாற்று மூலமாக நிதி அனுப்ப விரும்பும் தோழர்களுக்காக அது சம்பந்தப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**Tamil Nadu Government Employees Association**
**SB Account No. 0346000100103835, IFSCode : PUNB 0034600,**
**Pubjab National Bank, Triplicane Branch**

நம்முடைய ஊக்கம் பெரிது, நோக்கம் பெரிது என்ற உணர்வோடு செயல்பட்டு கேரள மக்களின் துயர்துடைக்க உதவுவோம். மழை பெய்யட்டும், நாம் நம் கொடையால் குடை விரித்து கேரள மக்களின் துயர் துடைப்போம்!

ஒரு நாள் குடையிடம் கேட்டேன்:
"உனக்கு கவலைதரும் செயல் எது?
மழையில் நனைவதா? வெயிலில் காய்வதா?"

குடை புன்னகைத்துப் பின் சொன்னது:
"என் கவலை இதைப் பற்றியது அல்ல?"

நான் மீண்டும் கேட்டேன்:
"பின் எதைப் பற்றியது உன் கவலை?"

குடை சொன்னது:
"எப்படிப்பட்ட பேய் மழையானாலும்
என் மக்களை நனைய விடக்கூடாது,
எப்படிப்பட்ட வெயிலானாலும்
என் மக்களை காய விடக்கூடாது!"

- சீனக் கவிதை

## மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட கேரள வெள்ள நிவாரண நிதி விபரம்

| எண். | மாவட்டம் | தொகை | எண். | மாவட்டம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | வடசென்னை | 50850 | 18. | பெரம்பலூர் | 20000 |
| 2. | தென்சென்னை | 176225 | 19. | அரியலூர் | 29550 |
| 3. | காஞ்சிபுரம் | 163653 | 20. | திருச்சி | 5000 |
| 4. | திருவள்ளூர் | 50000 | 21. | புதுக்கோட்டை | 50000 |
| 5. | வேலூர் | 75000 | 22. | திண்டுக்கல் | 129290 |
| 6. | திருவண்ணாமலை | 72239 | 23. | மதுரை | 50000 |
| 7. | விழுப்புரம் | 50100 | 24. | தேனி | 52695 |
| 8. | கடலூர் | 50500 | 25. | சிவகங்கை | 10000 |
| 9. | தருமபுரி | 109500 | 26. | ராமநாதபுரம் | 50000 |
| 10. | கிருஷ்ணகிரி | 60590 | 27. | நாகப்பட்டினம் | 85000 |
| 11. | சேலம் | 70000 | 28. | திருவாரூர் | 50000 |
| 12. | நாமக்கல் | 10000 | 29. | தஞ்சாவூர் | 75040 |
| 13. | ஈரோடு | 75210 | 30. | விருதுநகர் | 51400 |
| 14. | திருப்பூர் | 108200 | 31. | தூத்துக்குடி | 50000 |
| 15. | கோவை | 138705 | 32. | திருநெல்வேலி | 6000 |
| 16. | நீலகிரி | 43600 | 33. | கன்னியாகுமரி | 74500 |
| 17. | கரூர் | 55280 | | **மொத்தம்** | **2148127** |

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

நாள் : 23.8.2018

பெறுநர்

மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்,**

தலைமைச் செயலகம்,

சென்னை - 600 009.

அய்யா,

பொருள் : ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு - கேரள மாநில வெள்ள நிவாரணத்திற்கு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் ஒருநாள் ஊதியத்தினை வழங்க முடிவு - ஒருநாள் ஊதியத்தினை பிடித்தம் செய்வதற்கு அரசாணை வெளியிடக் கோருதல் தொடர்பாக.

***

நவீன யுகத்தில் பல்வேறு அறிவியல் முன்னேற்றங்கள், தொழில்நுட்பங்களின் வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் இயற்கையின் சீற்றத்தின் முன்னே அவை அனைத்துமே செயலற்று போகக்கூடிய நிலைமைதான் உலகெங்கிலுமே உள்ளது. இயற்கைப் பேரிடர்களை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும், அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்த்திடவும், கட்டுப்படுத்திடவும் முடியும் என்றாலும், அவற்றினால் ஏற்படும் அழிவினை தடுத்திட இயலவில்லை என்பதுதான் எதார்த்தம்.

தற்போது கேரள மாநிலத்தில் நூற்றாண்டுகளில் காணாத கனமழையினால் கட்டுக்கடங்காத நீரானது பெருகி, மாநிலமே வெள்ளப் பாதிப்பினால் தத்தளித்து வருகிறது. கனமழையினால் கேரள மாநிலத்தின் அனைத்து அணைகளும் நிரம்பியதால், 37 அணைகளை ஒரே நேரத்தில் திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் தற்போது வரை 375 மனித உயிர்களும், ஆயிரக்கணக்கான கால்நடைகளும் உயிரிழந்து கடும் துக்கமான நிகழ்வு என்பது அரங்கேறி உள்ளது. வரலாறு காணாத பாதிப்புகளால் அல்லல்படும் கேரள மக்களுக்கு பல மாநில அரசாங்கங்களும், பிரபலங்களும், தனி நபர்களும் உதவிக் கரத்தினை நீட்டியுள்ளனர். பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கி மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தங்களை இணைத்து செயலாற்றி வருகின்றன.

நம்முடைய அண்டை மாநில சகோதர, சகோதரிகளுக்கு இந்த இக்கட்டான நேரத்தில் உதவிட தமிழக அரசு ஊழியர்கள் / ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ முன்வந்துள்ளது. 22.08.2018 அன்று மதுரையில் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில், தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள்,ஆசிரியர்கள் தங்களது ஒருநாள் ஊதியத்தினை கேரள வெள்ள நிவாரண நிதியாக வழங்குவார்கள் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்திலுள்ள அரசு ஊழியர்கள்,ஆசிரியர்கள் தங்களது ஒருநாள் ஊதியத்தினை கேரள மாநில மக்களின் வெள்ள நிவாரண நிதியாக வழங்குவதற்கு அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்வதற்கு அரசாணையினை விரைந்து பிறப்பிக்குமாறு ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ❖

## ABSTRACT

Disaster – Kerala Floods 2018 – Calamity of Severe Nature – Voluntary contribution by the members of Tamil Nadu IAS Officers Association and the Tamil Nadu Secretariat Officers' Association Chennai towards financial assistance to the Government of Kerala for Relief and Rehabilitation measures – Orders – Issued.

---

### PUBLIC (SPECIAL- B) DEPARTMENT

**G.O.Ms.No. 636** **Dated: 25.8.2018**

(Vilambi, Avani – 09, Thiruvalluvar Aandu 2049)

Read:

1. From the President, Tamil Nadu IAS Officers' Association, Chennai D.O. Letter No. 18/ACS/(Tpt)/2018, dated 20.08.2018
2. From the President, Tamil Nadu Secretariat Officers' Association, Secretariat, Chennai letter No.17/TANSOA/2018-1 dated 20.08.2018

@@@@@

ORDER:

The State of Kerala has witnessed the heavy rainfall during the month of August 2018, which caused and devastation to the infrastructure in several Districts of the State besides loss of many lives. The Government of India have declared the devastating floods in Kerala as a "Calamity of severe nature". There is an urgent need for joining the rebuilding efforts.

2. The Tamil Nadu IAS Officers Association and the Tamil Nadu Secretariat Officers' Association Chennai in the letters first and second read above have expressed their willingness to contribute One day's salary from their members towards relief and rehabilitation measures in the State of Kerala.

3. The Government has decided to accept the request of the Tamil Nadu IAS Officers Association and the Tamil Nadu Secretariat Officers' Association Chennai and direct that the voluntary contributions of One day's salary shall be deducted from the salary bill of the Officers for the month of August 2018 towards relief and rehabilitation measures in the State of Kerala.

4. Accordingly, the Drawing and Disbursing Officers shall be instructed to make use of the provisions in the Web Pay role application in the calculation of one day salary in the August 2018 pay bill. The amount shall be deducted on the basis of the gross amount of salary for the month of August 2018. The said amount deducted from the salary shall be credited directly to the Chief Minister's Distress Relief Fund Savings Bank account maintained at State Bank of India, City Branch Thiruvananthapuram {SB A/c No. 67319948232 IFSC Code: SBIN0070028 Swift Code: SBININBBT08 PAN. AAAGD0584M} on the due date of disbursement of salary. The officers already remitted the amount are free from do it again. The officers who have already presented their pay bills for the month of August 2018 without making deduction to the Kerala flood relief, may send their contributions directly through Net Banking or other sources as required by the Government of Kerala and intimate the fact to the Government as well to the Commissionerate of Treasuries and Accounts, Chennai.

5. The DDOs shall inform the Government and the Commissionerate of Treasuries and Accounts, Chennai on the ECS mode of deduction from the monthly pay bill and the amount credited to the CMDRF account of the State of Kerala along with the list of Officers of IAS (TN Cadre) from whom the contributions are deducted.

6. The amount deducted from the officers serving in PSUs / Corporations / Autonomous bodies on their own mode of payment of salary, shall also be credited directly to the CMDRF account of the State of Kerala by ECS mode and arrange to send the list of officers who have made contributions to the Government as well as to the Commissionerate of Treasuries and Accounts, Chennai.

7. The Principal Secretary / Commissioner, Treasuries and Accounts, Chennai is requested to intimate the Government about the exact amount transacted towards contribution of One days' salary of the members of the Service Associations to the CMDRF account of the State of Kerala for its relief and rehabilitation measures.

8. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No: 3275/ACS(FAC)/P//2018 Dated: 24.08.2018.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**GIRIJA VAIDYANATHAN**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

SF/SC

// Forwarded/By Order //

SECTION OFFICER

# கூட்டுறவு சங்க பணியாளர் தேர்தலில் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் வெற்றி

*ஓ.என்.10.* நாகப்பட்டினம் அரசாங்கப் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்க நிர்வாகக் குழு தேர்தலில் ஏ.ட்டீ.அன்பழகன் (உணவு பாதுகாப்பு அலுவலர்), ப.அந்துவன் சேரல் (புள்ளியல் அலுவலர்), பா.ராணி (கிராம சுகாதார செவிலியர்), சி.கலியபெருமாள் (சத்துணவு அமைப்பாளர்), எஸ்.மாலா (நீதித்துறை கட்டளை பணியாளர்), எஸ்.இராஜம் (ஆசிரியர்), சு.சிவகுமார் (ஆசிரியர்), சி.காந்தி (ஆசிரியர்), வை.நாகராஜ் (நூலகத்துறை), ச.செந்தில்குமார் (கூட்டுறவு தணிக்கைத் துறை) மற்றும் ப்பி.வைரவமூர்த்தி (விடுதிக் காப்பாளர்) ஆகியோர் இயக்குனர்களாக தேர்தெடுக்கப் பட்டனர்.

*11.08.18* அன்று நடைபெற்ற தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டச் செயலாளரும், நாகப்பட்டினம் நகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலருமான ஏ.ட்டீ.அன்பழகன் தலைவராக வும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டப் பொருளாளரும், வடலூர் ஆரம்ப சுகாதார நிலைய கிராம சுகாதார செவிலியருமான பா.ராணி துணைத் தலைவராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

தேர்தல் அலுவலர் யூ.திவாகர் (கூட்டுறவு சார் பதிவாளர்) வெற்றி பெற்றதற்கான சான்றுகளை ஏ.ட்டீ.அன்பழகன் மற்றும் பா.ராணி ஆகியோரிடம் வழங்கினார்.

பின்னர் தலைவர், துணைத் தலைவர் மற்றும் இயக்குனர்கள் அன்று பிற்பகலிலேயே பணிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

சங்க புதிய நிர்வாகிகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகப்பட்டினம் வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், நகராட்சி ஊழியர் சங்கத் தலைவர் மோகன், சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் ஒன்றியத் தலைவர் எஸ்.சேகர் மற்றும் ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்தினர்.

சங்கத்தின் செயலாளர் எஸ்.விஜயலெட்சுமி மற்றும் பணியாளர்கள் கே.ராஜேந்திரன், ஏ.கோவிந்த சுவாமிநாதன் ஆகியோர் பணியேற்பு நிகழ்வில் உணனடனிருந்தனர்.

❖

## ABSTRACT

Disaster – Kerala Floods 2018 – Voluntary contribution of One day's salary by the Government Employees and Teachers towards financial assistance to the Government of Kerala for Relief and Rehabilitation measures – Orders – Issued.

---

## PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (K) DEPARTMENT

G.O.(Ms) No.114

Date: 27.08.2018
விளம்பி, ஆவணி – 11
திருவள்ளுவர் ஆண்டு 2049.
Read:

G.O.(Ms.) No. 636, Public (Special-B) Department, dated 25.8.2018.

*********

**ORDER:**

The State of Kerala has witnessed a heavy rainfall during the month of August 2018, which caused and devastation to the infrastructure in several Districts of the State, besides loss of many lives. The Government of India has declared the devastating floods in the State of Kerala as a "Calamity of severe nature". There is an urgent need for joining hands in the rebuilding efforts.

2. Some of the service associations of Tamil Nadu Government Employees and Teachers have expressed their willingness to contribute One day's salary of their members towards the relief and rehabilitation measures in the State of Kerala.

3. The Government have decided to accept the requests of the service associations of Government Employees and Teachers, and direct that the voluntary contributions of One day's salary shall be deducted from the salary bill of the Government Employees and Teachers for the month of August or September, 2018 towards the relief and rehabilitation measures in the State of Kerala.

4. Accordingly, any employee willing to voluntarily contribute One day's salary to the relief and rehabilitation measures taken up in the State of Kerala, shall give his/her willingness in writing to the concerned Drawing and Disbursing Officers. The Drawing and Disbursing Officers shall make use of the provisions in the Web Payroll application for the calculation of One day's salary in the month of August or September, 2018 pay bill as the case may be. The amount shall be deducted on the basis of the gross amount of salary for the month of August or September, 2018 and the same shall be credited directly to the Chief Minister's Distress Relief Fund Savings Bank account maintained at State Bank of India, City Branch, Thiruvananthapuram (**SB A/c No. 67319948232, IFSC Code: SBIN0070028, Swift Code: SBININBBT08, PAN: AAAGD0584M**) on the due date of disbursement of salary.

5. In respect of self drawing officers, the same procedures outlined above shall be followed.

6. These shall apply *mutatis mutandis* to the employees of Local Bodies, Universities, Boards and Corporations, Aided Educational Institutions and other institutions receiving grants from the Government and also to the employees drawing Consolidated Pay.

7. The Drawing and Disbursing Officers shall inform the Heads of Department concerned regarding the details on the ECS mode of deduction from the monthly pay bill and the total amount credited to the CMDRF account of the State of Kerala, along with the list of employees by whom the contributions were made. The Heads of Department in turn shall send the consolidated details to the Government in Personnel and Administrative Reforms department and the Commissionerate of Treasuries and Accounts, Chennai.

8. The Principal Secretary / Commissioner of Treasuries and Accounts, Chennai is requested to intimate the Government about the exact amount transacted towards contribution of One day's salary of the employees to the CMDRF account of the State of Kerala for its relief and rehabilitation measures.

9. The Drawing and Disbursing Officers shall ensure that the contributions are made purely voluntarily and the above procedures have been evolved in order to facilitate the requests made by the service associations of Government Employees and Teachers for contribution to the relief and rehabilitation measures in the State of Kerala.

10. This order issues with the concurrence of the Finance Department vide its U.O. No.3275/ACS(FAC)/P/2018, Dated 24.8. 2018.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**GIRIJA VAIDYANATHAN**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

//Forwarded By Order//

R. Jayammy 27.8.2018
SECTION OFFICER

# மனிதம் தோற்றதில்லை
# குவிந்திருக்கிறது அரசு ஊழியர்களிடம்

சி.ஆர்.இராஜ்குமார்

கேரள மக்களால் ஒருபோதும் மறக்க முடியாத நாள்தான் ஆகஸ்ட் 8. நல்ல காலநிலை. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேல் என காட்சி யளிக்கும் இயற்கை சூழலை தன்னகத்தே கொண்ட கேரள மாநிலம். ஆகஸ்ட் முதல் வாரம் முன் கொட்டித் தீர்த்த வரலாறு காணாத அடை மழையால் பேரழிவுகளை சந்தித்தது. வழக்கமாக ஜூன் முதல் ஆகஸ்ட் 20 வரை கேரளாவில் சராசரியாக 1650 மி.மீ. மழை பெய்யும். ஆனால், இவ்வருடம் இதுவரை 2346.3 மி.மீ. மழை பெய்துள்ளது. இது சராசரியைவிட 42 சதவீதம் கூடுதலாகும்.

கேரளாவின் மிகப்பெரிய அணையான இடுக்கி அணை வரலாற்றில் முதன்முறையாக அனைத்து மதகுகளையும் திறக்கும் அளவுக்கு மோசமானது. தொடர் மழையால் கேரள வரலாற்றில் அனைத்து அணைகளும் ஒரே சமயத்தில் திறக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். இதுதான் கேரள மாநிலத்தின் பேரழிவுக்கு முக்கிய காரணமாக அமைந்தது. கேரளாவில் மொத்தமுள்ள 14 மாவட்டங்களில் திருவனந்தபுரம், கொல்லம், கண்ணூர் மற்றும் காசர்கோடு ஆகிய 4 மாவட் டங்கள் தவிர மீதமுள்ள 10 மாவட்டங்களும் வெள்ளத்தில் மிதந்தன.

இயற்கையின் கோர தாண்டவத்தால் 1924ஆம் ஆண்டுக்குப் பிறகு கேரளத்தை தாக்கியிருக்கும் இந்த பேரிடரால் சுமார் 450க்கும் மேற்பட்டோர் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள். 5465 நிவாரண முகாம்களில் சுமார் 13 லட்சத்திற்கும் அதிகமானோர் தங்க வைக்கப்பட்டனர். இடுக்கி மாவட்டத்தில் 80 சதவீத சாலைகளும் சேத மடைந்து விட்டன. இயற்கை இறுதியாக கருணை காட்டியபொழுது ரூ.20,000 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தது. மத்திய அரசோ இழப்பீடாக வெறும் ரூ.600 கோடிய மட்டுமே அளித்திருந்தது. அனைத்தையும் இழந்து நிற்கும் கேரள மக்களுக்கு தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, ஜார்க்கண்ட் உட்பட அண்டை மாநிலங்கள், தனியார் நிறுவனங்கள், நடிகர்கள், பொதுமக்கள் மற்றும் வெளிநாடுகள் என பலரும் போட்டி போட்டு உதவி வருகின்றனர். அவர்களோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனமும் இணைந்து நிவாரணப் பொருட்களையும், நிவாரண உதவிகளையும் செய்ய வேண்டுமென முடிவெடுத்ததன் அடிப்படையில் மாநிலம் முழுவதிலுமிருந்து திரட்டப்பட்ட ரூ.4 லட்சம் மதிப்பிலான 7 டன் நிவாரண பொருட்களை கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்த புரத்தில் “நிஷா கந்தி” ஆடிட்டோரியத்தில் அமைந்துள்ள நிவாரண பொருட்கள் சேகரிப்பு மையத்தில் கேரள அரசு சார்பில் நியமிக்கப்பட்ட நிர்வாக அலுவலர் திருமதி ஹரிதா ஐஏஎஸ் அவர்களிடம் மாநில, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி நிர்வாகிகளால் 24.8.2018 அன்று ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின்போது சமூக ஆர்வலர் விபின்சந்த் மற்றும் கேரள மாநில என்.ஜி.ஓ. யூனியன் துணைத் தலைவர் அப்துல் ரஹீம் ஆகியோர் உடனிருந்தனர்.

தோழர்களே,

இயற்கையின் கோர தாண்டவத்தை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் மக்களோடு நின்று எதிர்கொண்ட விதம் ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது என்றால் அது மிகையல்ல. அதாவது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற் காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவும் தான் ஒரு மக்கள் முதல்வர் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரமேஷ் சென்னிதலா மற்றும் மத்திய அமைச்சரையும் தன்னோடு அழைத்துச் சென்றார். மேலும், கௌரவம் பார்க்காமல் பாதிக்கப்பட்ட கேரள மக்களுக்கு உதவிட முன்வருமாறு உலகம் முழுவதிலுமுள்ள நல்லுள்ளம் படைத்தோரை அறைகூவவி அழைத்தது என்பது தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கு முன்னுதாரண மாக அமைந்திருந்தது.

மேலும், நிவாரண முகாம்களை ஆளும் கட்சியின் கூடாரமாகவோ, தேர்தல் பிரச்சாரக் களமாகவோ மாற்ற அவர் விரும்பவில்லை.

ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு உயர் அரசு அலுவலரை நிர்வாக அலுவலராக நியமித்து அவர்கள் முன்னிலையில் நிவாரணப் பொருட்கள் பெறப்பட்டது என்பதுடன், முகாம் அலுவலர் முன்னிலையிலேயே பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. அரசியல், கட்சி, ஜாதி, மத, இன, மொழி மற்றும் பிராந்திய உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது என்பதும் வித்தியாசமான அனுபவத்தை தந்தது. காரணம் 2014-ல் வர்தா புயலால் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொட்டலங்களில் “அம்மா ஸ்டிக்கர்” ஒட்டப்பட்டது ஞாபகத்திற்கு வந்தது.

தாங்கள் செய்த மனிதநேயப் பணிக்கு அரசு அறிவித்த ரூ.3000 தினப்படியை மறுத்த மீனவ மக்களையும், நிவாரண முகாமில் இறந்த இந்து மதத்தவர் ஒருவரை புதைக்க இடமில்லாமல் உறவினர்கள் கண்ணீர் விட்ட பொழுது கிறித்தவர்களை அடக்கும் இடத்தில் இடமளித்த பாதிரியாரும் பாராட்டப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

மேலும், மன ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பாதிப்படைந்திருக்கும் மக்களை முடிந்த அளவு கேரள அரசு மறுகுடியமர்த்தி வருவது பாராட்டத்தக்க ஒன்று. வெள்ள பாதிப்புகளால் தொற்று நோய்கள் ஏற்பட்டு விடாமல் அனைத்து வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வரும் கேரளம் மிக விரைவிலேயே மீண்டெழுந்து பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் திகழும் என உறுதியாக நம்பலாம்.




கன்னியாகுமரியிலிருந்து கேரளாவிற்கு நிவாரணப் பொருட்கள் ஏற்றிக் கொண்டு செல்லும் வண்டியை கொடியசைத்து துவக்கி வைக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் சி.ஆர்.இராஜ்குமார்



நிவாரண பொருட்கள் சேகரிப்பு மையத்தில் கேரள அரசு சார்பில் நியமிக்கப்பட்ட நிர்வாக அலுவலர் திருமதி ஹரிதா ஐஏஎஸ் அவர்களிடம் மாநில, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி நிர்வாகிகளால் 24.8.2018 அன்று ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் போது சமூக ஆர்வலர் விபின்சந்த் மற்றும் கேரள மாநில என்.ஜி.ஓ. யூனியன் துணைத் தலைவர் அப்துல் ரஹீம் ஆகியோர் உடனிருந்தனர்.

# மீண்டெழுலில் மலையாள தேசம்

மழையாளும் தேசமானது
மலையாள தேசம்

நூற்றாண்டு மழை
ஓராண்டில் ஒருமித்து
கூரம்பாய்க் குத்திக் கிழித்தது

மாண்ட மக்களின் உயிர்
யாண்டும் உணர்த்தும்
வேண்டும் வருமுன் காப்பு

தூர தேசங்கள்
ஆரத் தழுவிய
பக்கத்து மாநிலங்கள்
திக்கற்றோருக்குத் துணையாயின
சங்கங்கள் யாவும்
நேசக்கரம் நீட்டின

கடவுளின் தேசம்
கடந்து போனது
கடவுளைப் பெயரில் மட்டுமே கண்டு
மீட்பர்கள் மீனவர்கள்
ஆட்கொண்டனவர்
கடவுள் உருவில் இன்று

இழவு வீட்டிலும்
வழமை போல்
கூச்சலிட்டுக் குழப்பம்
கூச்சமின்றி சங்பரிவார் குடும்பம்

ஐயப்பன் ஆலயம்
ஐயமின்றி தரிசனம்
பெண்டிர்க்கு மாகாட்டும்
ஆண்டவர்கள் சொல்லாததை
ஆள்பவர்கள் சொன்னது
கேள்விக்குறியாக்கும் குயுக்தி
இதற்கும் வான்மழைக்கும்
குதர்க்க முடிச்சு

மொட்டைத் தலைக்கும்
முழங்காலுக்கும்

நச்சுப் பரப்புரை
உச்சுக்கொட்டி மக்கள்
ஒதுக்கினர் வெறுப்புரை

உடல்நலம் ஓரங்கட்டி
கடலாய் காட்சி தரும்
மாநிலத்தை மீட்பதில்
முதல்வராய் முதல்வர்

உயிர் காக்க
உயர் நடவடிக்கை
அயராதுழைக்கும் மீட்பர்கள்

கிள்ளிக் கொடுத்த நடுவணரசு
அள்ளிக் கொடுக்கும் அரபு அரசு
வெள்ளிடை மலையாய் மீட்பு
வெள்ளையுள்ளமாய் விரியும் நட்பு

மீண்டெழுதலில் மலையாள தேசம்
கட்டமைத்ததில் கடவுளின் தேசம்
முன்மாதிரியாகும் மாநிலம்
எதிலும் எப்போதும்
முதலில் முத்திரை மேவும்.

*- பெரணமல்லூர் சேகரன்*

## செய்தியும்...அது சொல்லும் சேதியும்

முக்கொம்பில்
ஒன்பது மதகுகள் உடைந்தது
லட்சக்கணக்கான
மணல் மூட்டைகளால் தடுப்பணை அமைப்பு

**- செய்தி**

கொள்ளை போன மணலை
திரும்பக் கொட்டச் சொல்கிறது ஆறு!

**- சேதி**

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் கேரளா வெள்ள நிவாரண நிதியாக ரூ. 1 லட்சம் வழங்கினார்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் அவர்கள், கேரளா வெள்ள நிவாரண நிதியாக ரூ 1 லட்சத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதனிடம் வழங்கினார். பொருளாளர் கே.புகழேந்தி முன்னாள் மாவட்டத் தலைவர் என்.ராமஜெயம், தமிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாவட்டத் தலைவர் எம்.மணிவண்ணன், மாவட்டச் செயலாளர் ச.இளங்குமரன், நூலகத் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் எம்.முனிராஜ், உணவு பாதுகாப்புத் துறை அலுவலர் சங்கத்தின் நாகராஜ், கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் பழனியம்மாள் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட செயலாளர் ஏ.சேகர் (முன்னாள் உணவு பாதுகாப்பு அலுவலர் தற்போது சுகாதார ஆய்வாளர் ) மூன்று விதமான சமூக பணிக்காக தொடர்ந்து மாதந்தோரும் ஒரு சிறு தொகையினை சேமித்து வந்துள்ளார்.

தனது மகன் மற்றும் மகளின் ஒவ்வொரு பிறந்த நாளன்றும் சமூக பணிக்காக ஆண்டுதோரும் செலவு செய்வது வழக்கமாக கொண்டிருந்திருக்கிறார். 23.08.18 அன்று அவருடைய புதல்வியின் பிறந்த நாள். இந்நிலையில் கேரளாவில் வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தனது நீண்டநாள் சேமிப்பிலிருந்து ரூபாய் ஒரு லட்சத்தை நிவராண நிதியாக மனமுவந்து, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தருமபுரி மாவட்டத் தலைவர் சுருளிநாதன் அவர்களிடம் வழங்கினார். இச் செயல் மிகவும் போன்றத் தக்க செயலாகும்.அவரின் புதல்விக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

---



ராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டக் கிளை செயலாளர் எம்.திருமுருகனது புதல்வி செல்வி. டி.எம்.ஹாசினி கேரள வெள்ள நிவாரண நிதியாக தனது சேமிப்புத் தொகையான ரூ.493-ஐ மாவட்டச் செயலாளரிடம் வழங்கினார்.

---

## வாசகர் கடிதம்

கடந்த ஆகஸ்ட் மாத இதழ் படித்தேன். முன் அட்டைப் படத்தில் ஒரே போராட்டமாய் இருந்ததால் போர்க்கோலம் எழுச்சியூட்டியது. தலையங்கம் படித்தேன். மறைமுக வெறிபிடித்த பாஜக பினாமி அரசு என்பதை உணர்ந்தேன். இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் குறித்த கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. பொன் விழா கண்ட நீதித்துறை ஊழியர் சங்கம் குறித்த செய்தி, மறைந்த நமது சங்கத் தலைவர் இரா.முத்துசுந்தரம் குறித்த செய்திகள் மற்றும் அனைத்துவிதமான கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

# பல்கலைக்கழக மானியக் குழு காப்பாற்றப்பட வேண்டும்

பாண்டியன்

இந்தியாவில் உள்ள மாணவர்களுக்கு சுயசிந்தனையை வளர்க்க வேண்டும், மாணவர்களின் கல்வித் திறன் அதிகரிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் 1948ல் பல்கலைக்கழக வாரியமாக ஆரம்பிக்கப்பட்டு, உயர் தரமான உயர் கல்வி மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இலக்கோடு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியும், சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், மௌலனா அபுல்கலாம் ஆசாத், சி.டி.தேஷ்முக் மற்றும் மாதுரிஷா போன்ற மிகச் சிறந்த கல்வியாளர்களாலும், தொலைநோக்கு சிந்தனை யுடன் 1956-ல் பல்கலைக்கழக மானியக் குழு ஆரம்பிக்கப்பட்டது. யுஜிசி ஆரம்பிக்கப்பட்டதில் தமிழகத்தின் பங்கு மிக முக்கியமானது. இதில் மூளையாக இருந்து செயல்பட்டவர் ஆற்காடு லட்சுமணசாமி முதலியார்.

இந்தக் குழுவின் வாயிலாக பல்கலைக்கழக கல்வியை மேம்படுத்துதல் மற்றும் ஒருங் கிணைத்தல், பல்கலைக்கழகங்களின் கற்பித்தல், பரிசோதனை மற்றும் ஆய்வுகளின் தரத்தை நிர்ணயிப்பது மற்றும் பராமரிப்பது, உயர் கல்விக்கு குறைந்தபட்ச தரங்களை வடிவமைத் தல் மற்றும் கல்லூரி, பல்கலைக்கழக கல்வித் துறையில் கண்காணிப்பு முன்னேற்றங்கள் பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் வழங்கப்படும் மானிங்கள் ஆகிய இலக்குடன் 62 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இது போன்ற தொலைநோக்கு சிந்தனையுடன் ஆரம் பிக்கப்பட்டது பல்கலைக்கழக மானியக்குழு.

சமூகத்தில் இன்னும் அனைவருக்கும் உயர் கல்வி என்பது எட்டாக்கனியாக உள்ளது. இந்தியாவில் உள்ள பல பல்கலைக்கழகம், கல்லூரிகளில் துணைவேந்தர்கள், முதல்வர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பிற முக்கிய பதவிகளில் சமூக நீதி கடைபிடிக்கப்படவில்லை. இந்தப் பதவிகளில் இன்னும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. யுஜிசி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. அதற்குள் பல்கலைக்கழக மானியக் குழு தற்போது கலைக்கப்பட விருக்கிறது.




இந்தியாவின் உயர் கல்வியை தனியாருக்கு தாரை வார்க்கவும், பணம் உள்ளவர்கள் மட்டுமே உயர் கல்வி பெறலாம் என்ற உயரிய சிந்தினையுடனும், அந்நிய நிறுவனங்கள் இங்கு நுழையவும் பல்கலைக்கழக மானியக் குழுவினை கலைத்துவிட்டு அதற்கு பதிலாக இந்திய உயர் கல்வி ஆணையம் (Higher Education Commission of India - HEI) என்ற புதிய அமைப்பினை ஏற்படுத்த பாரதீய ஜனதா அரசு முடிவு செய்து அதற்கான வேலைகளில் இறங்கிவிட்டது. இந்த புதிய அமைப்பு கல்விக்கு தொடர்பில்லாத நபர்கள் வாயிலாக பல்கலைக்கழகம், கல்லூரி களின் திட்டங்களை மதிப்பீடு செய்து அதற்கான மானியங்களை வழங்கும்.

இதற்கான அறிவிப்பினை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் இணையதளத்தில் ஆங்கில மொழியில் மட்டுமே வெளியிட்டு, அதற்கான கருத்து கேட்பினையும் மிகக்குறுகிய காலத்திற்குள் முடிக்கவும் திட்டமிட்டு செயல் பட்டு கொண்டு இருக்கிறது. கருத்து கேட்பு முன்வரைவு என்று முன்வைக்கப்பட்டு அறிவித்து இருந்தாலும், உண்மையில் இது "மசோதா" என்பதற்கு பதிலாக "சட்டம்" என்ற பதத்துடன் "இந்திய உயர் கல்வி ஆணையச் சட்டம் 2018 என்ற முன்வரைவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஏர்பனவேரிலையன்ஸ் டிபைன்ஸ் என்ற நிறுவனத்திற்காக இந்திய அரசியல் அமைப்பில் மிக அவசர அவசரமாக செய்யப்பட்ட சட்டத் திருத்தம் போல், இதுவும் மிகக் குறுகிய காலத்திற்குள் முடித்து தனியாருக்கு தாரை வார்க்க செய்யப்படும் திட்டமாக உள்ளது.

சமூகநீதி, சம நீதி என்ற நோக்கத்திற்கு எதிராக "தகுதி மட்டுமே" என்ற கருத்தாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டம் வரைவு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சாசனத்தின் ஏழாவது அட்டவணை, மத்திய அரசின் அதிகாரப் பட்டியல் (100 எண்ணிக்கை கடைசியாக 97), மாநில அரசின் அதிகாரப் பட்டியல் (61 எண்ணிக்கை கடைசியாக 66), பொதுப் பட்டியல் (52 எண்ணிக்கை கடைசியாக 47) என வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு மாநில எல்லையோடு சுருங்கி விடாத நிறுவனங்களை மத்திய அரசு இணைக்கலாம், முறைப்படுத்த லாம்,தேவைப்பட்டால் கலைக்கலாம். இதனை வடிவமைத்த நம் முன்னோர் தெளிவான கண்ணோட்டத்துடன், மத்திய அரசின் இந்த இணைக்கலாம், முறைப்படத்தலாம், கலைக்க லாம் என்ற அதிகாரங்களுக்குள் பல்கலைக் கழகங்களை உட்படுத்தவில்லை. பல்கலைக் கழகங்களை இது உள்ளடக்கியதல்ல என்று மத்திய அரசுப் பட்டியலின் இடுகை 44 கூறுகிறது. மாநில அரசுப் பட்டியலின் இடுகை 32, பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட மாநில அளவிலான நிறுவனங்கள் யாவும் அந்தந்த மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை எனத் தெரிவிக்கிறது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள புதிய முன்வரைவுச் சட்டம், அரசாங்கத்தால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் என்று அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் தவிர்த்து, நாடாளுமன்றத்தின் எந்த ஒரு சட்டத்தின் கீழும், மாநில சட்டமன்றத்தின் எந்த ஒரு சட்டத்தின் கீழும் நிறுவப்பட்ட அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கும், அரசாங்கத்தால் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் என்று அறிவிக்கப்பட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துவதாகும் என்று கூறுகிறது. எந்தக் கல்வி நிறுவனத்தையும் மூடுவதற்கு ஆணையத்ததுக்குச் சுயேச்சையான அதிகாரத்தை அளிக்கிற இந்த முன்வரைவுச் சட்டம், அரசமைப்புச் சாசனத்தின் மேற்படி பட்டியல்களை அழிக்கிறது. கூட்டாட்சித் தத்துவக் கோட் பாட்டைக் இது குலைக்கிறது. மாநில உரிமைகளில் தலையீடுகிறது.

1991 மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட தாராளமயம், தனியார்மயம், உலகமயம் (எல்பிஜி)ன் படியும், 1994 காட் ஒப்பந்தன்படி கல்வி சேவை பட்டியலில் இருந்து வர்த்தக பணியாக மாற்றப்பட்டு, பல தனியார் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, யூஜிசியில் பல்வேறு குளறுபடிகளையும், பல்வேறு விமர்சனங்களும் இந்த அமைப்பின் மீது தொடர்ந்து ஏவப்பட்டு வருகிறது. கல்வியில் அரசின் பங்கினை குறைக்கவும், கல்வியை தனியாருக்கு வழங்கும் வகையில் இந்த புதிய சட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவில் 50 சதவிகிதம் கல்வியாளர்கள் மட்டுமே உறுப்பினர்களாக உள்ளார்கள். இந்த உறுப்பினர்களை மத்திய அரசால் நீக்க முடியாது, ஆகையால் இந்த உறுப்பினர்கள் சுதந்திரமாக செயல்பட்டு பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தார்கள். புதிய சட்டத்தில் 25 சதவிகிதம் மட்டுமே கல்வியாளர்கள் இருப்பார்கள். இந்தக் குழுவிற்கான தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை இதுவரை கல்வியாளர்களே தேர்வு செய்து வந்தார்கள், புதிய சட்டத்தில் கல்வித் துறை செயலாளர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழு தேர்வு செய்யப்படும் எனவும் இக்குழுவில் வெளிநாடுவாழ் இந்தியர்களும் இடம் பெறலாம் என மாற்றப்பட்டுள்ளது. இந்த உறுப்பினர்களை மத்திய அரசு நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் நீக்கலாம்.

ஆரம்பக் கல்விகூட இன்னும் முழுமையாக வழங்கப்படாத இந்த நாட்டில் ஒரே நிர்வாகத்தின் கீழ் உயர்கல்வி என்பது எவ்வாறு சாத்தியம்? வெளிப்படைத்தன்மை இல்லாத இந்த சட்ட முன்வரைவை ஆழமாகப் பார்த்தால் பல குறைபாடுகளும், ஏழைகளின் உயர் கல்வி பயிலும் உரிமைகளை பறிக்க வல்லதாகவும், மாநில உரிமைகளுக்கு எதிராகவும், சமூகநீதிக்கு எதிராகவும் உள்ளன. இதனை பல கல்வியாளர் களும், சமூக சிந்தனையாளர்களும், பல அரசியல் கட்சியினரும், கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர் களும், பல்வேறு கல்லூரி ஆசிரியர் அமைப்பு களும் மத்திய அரசிற்கு கடிதங்களாகவும், தீர்மானங்களாகவும், கட்டுரைகளாகவும் அனுப்பியும், நேரிலும் வழங்கி இந்த சட்டத்தை ரத்து செய்ய தொடர்ந்து கோரி வருகிறார்கள். மேலும் அனைத்து சமூக சிந்தனையாளர்கள், கல்வியாளர்கள், அனைத்து பொது அமைப்பு களும் தொடர்ந்து இயக்கங்கள் நடத்தி இந்த அமைப்பினை காப்பாற்றப்பட வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். ❖

# பழி தீர்க்கும் பசுமைச்சாலை



**மோ**டி அரசு பதவியேற்ற நான்கு ஆண்டுகளில் நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யாமல், தமிழ்நாட்டுக்கு தேவை யில்லாத திட்டங்களை தேடித்தேடி கண்டுபிடித்து நாட்டு மக்களின் வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கின்றார். சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கி வைத்திருப்பவர்களின் பட்டியலை கண்டுபிடித்து இந்திய நாட்டுக்கு கொண்டுவந்து ஏழைகளின் வங்கிக் கணக்குகளில் ஒவ்வொரு வருக்கும் ரூ.15 லட்சம் வரை வரவு வைப்பேன் என்று கூறிய பாரத பிரதமர் அவர்கள், மாறாக 1000 மற்றும் 500 ரூபாய் நோட்டுகளை நடு இரவில் செல்லாது என்று அறிவித்து பாமர மக்களை பட்டினி போட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், குறிப்பாக தமிழ்நாட்டில் தமிழர் களின் வீரவிளையாட்டான மஞ்சுவிரட்டு தடையை நீக்கக் கோரி தமிழகம் முழுவதும் மகத்தான போராட்டம் நடத்தி தடை ஆணையை தகர்த்தெறிந்து மீண்டும் சட்டப்படியான மஞ்சு விரட்டு ஆணையை பெற்றவர்கள் தமிழ்நாட்டு மக்கள். அதனால் அன்றிலிருந்து மனதில் வஞ்சக எண்ணத்தோடு குறிப்பாக தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்கின்றோம் என்று நாசகர திட்டங் களை கொண்டுவந்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சகம் தீர்க்க நினைக்கிறார். அதற்கு தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் எடப்பாடி அரசும் தலையாட்டி பொம்மையாக இருந்து வருகின்றது.

அதன்பிறகு கதிராமங்கலம், நெடுவாசல் திட்டம் கொண்டுவந்து தமிழ்நாட்டின் நெற் களஞ்சியமான தஞ்சை காவிரி டெல்டா விளைநிலங்களை தரிசு நிலங்களாக மாற்றும் திட்டத்தை மனசாட்சி இல்லாமல் நடத்த உத்தரவிட்ட மத்திய, மாநில அரசுகளை எதிர்த்து அனைத்து வகையான மக்களும் குறிப்பாக தமிழ்நாடு விவசாயத்தை சேர்ந்தவர்களும், விவசாயத் தொழிலாளர்களும் தங்களது உயிரை பணயம் வைத்து தொடர்ச்சியான போராட்டம் நடத்தியதால் மத்திய அரசும், மாநில அரசும் வேறு வழியின்றி அந்தத் திட்டங்களை ரத்து செய்தது. நாட்டு மக்களையும், குறிப்பாக தமிழ்நாட்டு மக்களையும் நடுத்தெருவில் விட வேண்டும் என்ற எண்ணத்தோடு மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் மூலமாக தூத்துக்குடி மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியமான தீமைகள் கண்டு தானாக வெகுண்டெழுந்த மக்கள் நியாயமான முறையில் போராட்டம் நடத்திய போதிலும், எடப்பாடி அரசு மோடியை மனதில் வைத்துக்கொண்டு 13 அப்பாவி மக்களை துப்பாக்கியால் சுட்டுக்

கொன்றுவிட்டு பாசாங்கு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. மொத்தத்தில் தமிழ்நாட்டு மக்களின் போராட்ட வழிகளை பார்த்த மோடி அரசு தமிழகத்தை பாலைவனமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் துடிதுடித்து தேவையில்லாத திட்டங்களை கொண்டுவந்து தமிழ்நாட்டு மக்களை பாதாளக் குழியில் தள்ளிவிட நினைக்கிறார்.

தமிழ்நாடு அரசும் மத்திய அரசுக்கு துணை போகின்றது என்பது மட்டும் வெட்ட வெளிச்சமாகின்றது. தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையில்லாத திட்டங்களை கொண்டுவந்து செயல்படுத்தியதால் அதை அறவழியில் நின்று போராடி தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள். இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு மத்திய அரசு தற்போது சேலம் முதல் சென்னை வரை எட்டு வழி பசுமைச்சாலை என்று பசுமை வாய்ந்த பகுதிகளை பாழ்படுத்த நினைக்கின்றார். அதை எடப்பாடி அரசு கைகட்டி வாய் பொத்தி நிற்பதுடன் விவசாயிகளை தன் கைவசம் உள்ள காவல் துறையை ஏவிவிட்டு வீடு, பேருந்து நிலையம், ஓட்டல் போன்ற இடங்களுக்குச் சென்று கைது செய்து சிறையில் அடைத்து சித்ரவதை செய்து வருகின்றார்கள்.

“ஏரிக்கரை ஓரத்திலே எட்டு வேலிநிலம் இருந்தால்

எட்டுவேலி நிலத்திலும் என்ன வைத்தால் தோப்பாகும்

வாழை வைத்தால் தோப்பாகும், மஞ்சள் வைத்தால் பிஞ்செங்கும்


ஆழமாய் உழுது நட்டால் அத்தனையும் பொன்னாகும்”

என்ற காலம் போய் எட்டு வேலி சாலை அமைத்து பொன் விளையும் பூமியை பொறாமை யின் காரணமாக மோடியும், எடப்பாடியும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கல்லா பெட்டி நிறைவதற்கு பசுமை நிலங்களை பாழ்படுத்தி விவசாயிகளின் முதுகெலும்பை முறிக்கும் வண்ணம் வாழ்வாதார பிரச்சனையில் விளை யாடிக் கொண்டிருக்கின்றார்கள். எப்படியாவது எட்டு வழிச் சாலையை நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்று மத்திய அரசும், மாநில அரசும் காவல் துறை மூலம் நடவடிக்கை எடுத்து மக்களையும், விவசாயிகளையும் ஒடுக்கப் பார்க்கிறார்கள்.

இத்துடன் நாட்டு மக்களையும், விவசாயி களையும் கண்டுகொள்ளாமல் மோடி பதவியேற்ற நான்கு ஆண்டுகளில் 41 பயணங்களில், 52 நாடுகளுக்குச் சென்று 355 கோடி ரூபாயை செலவு செய்துள்ளார். 165 நாள் வெளிநாடுகளில் தங்கியிருந்து கார்ப்பரேட் நிறுவனங்களிடம் கைகோர்த்து கற்று வந்ததை மேலே கூறப்பட்ட மோசமான திட்டங்களை நிறைவேற்ற துடியாய் துடித்துக் கொண்டிருக்கும் மோடி அரசையும், எடப்பாடி அரசையும் தடுத்து நிறுத்துவன் விளைவாக தமிழ்நாட்டு மக்களை “பழி தீர்க்கும்” விதமாக 8 வழி பசுமைச் சாலை அமைத்து அம்பானிக்கும், அதானிக்கும் ஆதரவாக செயல்பட்டு வரும் மோடி அரசை அறவழியில் போராடி விவசாயிகளையும், மக்களையும் அறம் காத்து அமைதியாய் வாழ்வதற்கு அணிதிரள் வோம் வாருங்கள் தோழர்களே!

- **சி.அடைக்கன்**, மதுரை

## காவிரி அன்னை கேட்ட கேள்வி



விண் துளிகளாய்
குடகில் இறங்கி...
கர்நாடகக் கழனிகளை வளமாக்கி
தமிழக எல்லை பிலிகுண்டில் நுழைந்து...
ஒகனேக்கலில் ஓ... வென்றே...
நீர்வீழ்ச்சியாக ஆர்ப்பரித்து...
தமிழக மக்களின்
மனதில் நிறைந்திட...

“மணல் இல்லா” ஆறுகளின்
வழியே... கழனிகளை
வளமாக்க முடியாத...
ஏக்கத்தினூடே
சுருங்கிய நிலையில்... பூம்புகாரில்
கடலில் சங்கமிக்கின்றேன்.
விண்துளிகளாய்...
மீண்டும் தமிழகம் வரும்போழ்து
“மணல் நிறைந்த” ஆறுகளில்
பயணிப்பேனா...?

- **தீனி.மணி**, நாகப்பட்டினம்

## அரசு ஊழியர்-ஆசிரியர்களை தரக்குறைவாக பேசிய தமிழக முதல்வரை கண்டித்து ஜாக்டோ- ஜியோ கூட்டமைப்பு சார்பில் 30.8.2018 ஆர்ப்பாட்டம்

*தமிழ்நாடு முதலமைச்சர் சேலத்தில் நடைபெற்ற அஇஅதிமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களை தரக்குறைவாகவும், அவமரியாதையாகவும் பேசியுள்ளது தமிழ்நாடு ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மத்தியில் பேரதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. அதிகார பலம்மிக்க, பொறுப்புணர்வு மிக்க பதவி வகிக்கும் தமிழக முதல்வரே தரக்குறைவாக பேசியிருப்பது முதல்வர் பொறுப்புக்கே இழுக்கு மற்றும் கலங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். முதல்வர் தனது பேச்சில் குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர், ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர் களை குறிவைத்து தரக்குறைவாக பேசியிருப்பது ஆசிரியர் பணியின் மேன்மைக்கு கலங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே தரக்குறைவாக பேசிய தமிழக முதல்வரை கண்டித்து தமிழகம் முழுவதும் ஜாக்டோ-ஜியோ சார்பில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...*

### தருமபுரி

*ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட ஒருங்கிணைப் பாளர்கள் தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் பொன்.ரத்தினம், அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் பி.எம்.கௌரன் ஆகியோர் தலைமை வகித்தார்.*

*அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சிவப்பிரகாசம், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் எம்.மணிவண்ணன், வேளாண் அமைச்சுப் பணியாளர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.யோகராசு, சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், நிலஅளவைத் துறை ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் அண்ணா.குபேரன், தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்டத் தலைவர் எஸ்.வீரமணி மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டச் செயலாளர் ச.கவிதா, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் எஸ்.கேசவன் உள்ளிட்ட பலர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.*



### நாகப்பட்டினம்

*29.08.18 அன்று மாலை நாகப்பட்டினம் அவுரித் திடலில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.ட்டீ. அன்பழகன், பா.ரவி மற்றும் சி.சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழக ஆசிரியர் கூட்டணி தலைவர் பார்த்தசாரதி, ஆசிரியர் மன்ற மாவட்டச் செயலாளர் ஜெக.மணிவாசகம், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் வி.தேன்மொழி, வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் எல்.பிரேம்சந்திரன், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநிலச் செயலாளர் அ.சௌந்தரபாண்டியன் ஆகியோர் கண்டனவுரையாற்றினர். ஜாக்டோ-ஜியோ உயர்மட்டக்குழு உறுப்பினர் ப.அந்துவன் சேரல் நிறைவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். இதில் 50 பெண்கள் உட்பட 260 பேர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.*

### ஈரோடு




*ஈரோட்டில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்தில் மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி கலந்து கொண்டு உரையாற்றினார்.*

❖

# அரசு ஊழியர் சங்கம் சார்பில் நடைபெற்ற மனித சங்கிலி

**த**மிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையின் அறைகூவல் தீர்மானத்தின்படி இளைஞர்களின் வாழ்வை சீரழிக்கும் அரசாணை எண். 56-யை ரத்து செய்திட வலியுறுத்தி 21.8.2018 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மனிதச் சங்கிலி இயக்கப் போராட்டத்தினை நடத்திட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. அம்முடிவின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்ற மனித சங்கிலி இயக்கம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக...

### திண்டுக்கல்

திண்டுக்கல்லில் நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்திற்கு மாவட்டத் தலைவர் விஜய குமார் தலைமை தாங்கினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் முபாரக் அலி




பேசினார். வாலிபர் சங்கம் சார்பாக போஸ், மாணவர் சங்கம் சார்பாக முகேஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சங்கத்தின் பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

### மதுரை

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம் மற்றும் ஆசிரியர் அமைப்புகளை இணைத்துக் கொண்டு 9 வட்டக் கிளைகளிலும் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் தாம் பொறுப்பு வகிக்கும் வட்டக் கிளைகளில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மாலை 5 மணியளவில் மனிதச் சங்கிலி இயக்கம் தொடங்கியது. மாவட்டத் தலைவர் சு.ராஜராஜேஸ்வரன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் க.நீதிராஜா கோரிக்கை விளக்கவுரையாற்றினார் இந்திய மாணவர் சங்க மாவட்டச் செயலாளர் வேல்தேவா வாழ்த்திப் பேசினார். மாநிலத் துணைத் தலைவர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் சி.மூ.வேலு மணி நன்றி கூறினார். இதில் 76 பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### ராமநாதபுரம்

ராமநாதபுரம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து துவங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வரை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஆ.ராஜேந்திரன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் பெ.சேகர் விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் மற்றும் உள்ளாட்சித் துறையின்



எஸ்.கணேசமூர்த்தி வாழ்த்தி பேசினார். 25 பெண் ஊழியர்கள் உட்பட 150 பேர் பங்கேற்றனர்.

### நாகப்பட்டினம்

மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நாகை நீதிமன்ற வளாகத்திலிருந்து மனித சங்கிலி போராட்டம் தொடங்கியது.



மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் பா.ராணி, மாவட்ட, வட்டக் கிளை நிர்வாகிகள் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள் 250 பேர் இதில் பங்கேற்றனர். மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் நிறைவுரையாற்றினார்.

## தருமபுரி

தருமபுரி மாவட்ட அரசினர் மருத்துவமனை முன்பு போராட்டம் தொடங்கியது. மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தலைமையேற்றார். நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் செந்தில்குமார், அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, ஊரக வளர்ச்சித் துறையின் மாநிலச் செயலாளர் ஆறுமுகம், ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்



பாளர்கள் கௌரன் பொன்.ரத்தினம், தமிழ்நாடு மேல்நிலை நடுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் ச.கவிதா ஆகியோர் கோரிக்கை விளக்கவுரையாற்றினர். சிஐடியு மாவட்டச் செயலாளர் சி.நாகராசன், இன்சூரன்ஸ் ஊழியர் சங்கத்தின் ஏ.மாதேஸ்வரன், தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் டி.பாஸ்கரன், வாலிபர் சங்கத்தின் எழில் அரசு, மாணவர் சங்கத்தின் சதீஷ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## கடலூர்

21.8.2018 அன்று மாலை 5 முதல் 6.30 மணி வரை அம்பேத்கர் சிலை முன்பிருந்து மனித சங்கிலி இயக்கம் மாவட்ட தலைவர் ஆர்.பால சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் எல்.அரிகிருஷ்ணன்



வரவேற்புரை ஆற்றினார். ஓய்வூதியர் சங்கத்தின் மாநில செயலாளர் டி.புருஷோத்தமன், குடியிருப்போர் கூட்டமைப்பின் தலைவர் பி.வெங்கடேசன், டி.ஒய்.எப்.ஐ.மாவட்ட செயலாளர் டி.கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். ❖

# அரசு ஊழியர்களிடம் உறுதி

**ம**துரை மாநகராட்சி கடந்த வாரம் வெளியிட்ட தொழில்வரி சம்பந்தமான அறிக்கையில் தமிழகத்திலேயே அதிகபட்சமாக 35% ரூ.1647 என்ற வகையில் அடிப்படை பணியாளர் முதல் மாவட்ட ஆட்சியர் வரை ஒரே வரியை விதித்திருப்பதையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 276(2)ன் உள்ளாட்சித்துறையில் அதிகபட்சம் ஒருவருடத்திற்கு ரூ.2500 மிகாமல் இருக்க வேண்டுமென்ற அடிப்படையை மீறியதையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



மேலும் நமது சங்க கட்டிடம் அமைந்துள்ள மேலப்பெருமாள் மேஸ்திரி வீதி பல ஆண்டுகளாக மழைகாலங்களில் சேறும் சகதியும் வெயில் காலங்களில் தூசு மண்டலமாகவும் காட்சியளிப்பதை சுட்டிகாட்டப்பட்டதில் இரண்டு மாதத்தில் சாலை போடப்படும் என உறுதியளித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் சு.ராஜராஜேஸ்வரன், செயலாளர் க.நீதிராஜா, பொருளாளர் சி.மூ.வேலுமணி, துணைத் தலைவர்கள் த.ராமமூர்த்தி மு.ராம்தாஸ், இணைச்செயலாளர் அய்.தங்கம், வடக்கு வட்டக்கிளை செயலாளர் ரா.தமிழ்,பொருளாளர் யத்தீஸ்வரன் மற்றும் பொறுப்பு மாவட்ட மாநில நிர்வாகி மாநிலத்துணை தலைவர் ஆ.செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். ❖

**மரம் வளர்ப்போம்!**
**மழை பெறுவோம்!**

# குழந்தைகளும், பெண்களும், கமிட்டிகளும்

எஸ்.தமிழ்ச்செல்வி

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*

*- பாரதியார்*

இந்த வரிகளுக்கு உயிர் கொடுக்கும்விதமாக நிகழ்கால பெண்கள் விளங்கினாலும், இவற்றை நிஜமாக்க கடந்த காலத்தைவிட நிகழ் காலத்தில் மிகவும் போராட்டமயமாக உள்ளது. அப்படிப் பட்ட போராட்டம் பெண்களுக்கு தான் ஒரு பெண் குழந்தையை பெற்றெடுக்க உரிமை உள்ளதா? என்பதில் இருந்தே துவங்குகின்றது. கடந்த காலங்களில் பெண் சிசுக் கொலைகள் அதிகமாக இருக்கும் (1990ஆம் ஆண்டுகளில்). அதற்கு அரசு தண்டனையை துரிதப்படுத்தியதால் மாற்று வடிவமாக கருவிலேயே கண்டறிந்து பெண் கருவானால் அதனை அழிக்கும் நிலையை யும் தற்போது கடந்து மருத்துவ வளர்ச்சியில் ஆண் கருவை உருவாக்கி பெற்றுக் கொள்ளும் சூழல் உள்ளதால், 2013ஆம் ஆண்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 950 பெண் குழந்தைகள் என்ற விகிதாச்சாரம் தற்போது 1000க்கு 840ஆக குறைந்துள்ளது. எதிர்காலத்தில் மேலும் குறைந்து ஒரு பெண் தனியாக வெளியில் வர வேண்டும் என்றால் காவல் துறையின் துணையுடன்தான் வரமுடியும் என்ற நிலை உருவாகும் என்று ஆய்வறிக்கை கூறுகின்றன.

இன்றைய இந்தியா குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லாத நாடுகளின் பட்டியலில் முதல் இடம் வகிப்பதாக சர்வதேச செய்திகள் கூறுகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் குழந்தைகளின் மீதான வன்முறைகள் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு நாளும் 290 குழந்தை கள் வீதம் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன. பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்காக 2016ஆம் ஆண்டு மட்டும் 3,38,954 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. அது இந்த ஆண்டு நாடெங்கிலும் கூடுதலாகி யுள்ளது. பீகார் மாநிலத்தில் குழந்தைகள் பாதுகாப் புக்கான சமூக நலத்துறை அமைச்சரின் பதவியே ராஜினாமா செய்யும் அளவுக்கு வெட்கக்கேடாக உள்ளது.

இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் "தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திடம், உத்தரபிரதேசம்,



பீகார், அருணாச்சல பிரதேசம் போன்ற பல மாநிலங்கள் விவரங்களை அளிக்க ஒத்துழைப்ப தில்லை என்று ஆணையத்தின் வழக்கறிஞரே கூறும் நிலை உள்ளது. இதனால் ஆத்திரமடைந்த நீதிபதிகள் நமது நாட்டில் நிலவும் குழந்தைகள் மீதான வன்முறைகள் குறித்து வேதனை அடைவ தாகவும், உடனே நாடு முழுவதும் உள்ள காப்பகங்களின் நிலைமை குறித்து ஆய்வறிக் கையை மத்திய அரசு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்களின், குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது. தமிழகத்திலும் பாத்திமா, சுபாஷினி, பெண்கள், குழந்தைகள், மாற்றுத் திறனாளி குழந்தைகள் என்று பாதுகாப்பற்ற தன்மை பெண் குழந்தைகளின் வாழ்நிலையை கேள்விக்குறி யாக்குகிறது. நாடெங்கும் ஒரு நாளைக்கு 174 குழந்தைகள் காணாமல் போவதாக குற்றப்பதிவு ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சிறுமிகள் பாலி யல் பலாத்காரம் செய்யப்பட்டால் குற்றவாளி களுக்கு தூக்கு தண்டனை வழங்குவதற்கான சட்டத் திருத்தத்திற்கு கடந்த ஜூலை மாதத்தில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்தது. ஆனால், மனித உரிமை மீறல் என்று தள்ளுபடி செய்யும் சூழலில் குற்றங்கள் பெருகவே வாய்ப்புள்ளது.

குழந்தைகளுக்கான பாதுகாப்பு ஆணையங் களில் உறுப்பினர்களாக அரசியல் மற்றும் அதிகாரிகள் அல்லாத நிபுணர்கள் நியமனம்

செய்யப்பட வேண்டும் என்பது ஆணையங்களை அமைக்கும்போது கடைபிடிக்க வேண்டிய நியதி. கடந்த மாதம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் உறுப்பினராக பாஜகவின் நிர்வாகியை (தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்) நியமித்துள்ளது. ஒவ்வொரு மாவட் டத்திலும் குழந்தைகளை பாதுகாப்பதற்காக குழந்தைகள் பாதுகாப்பு குழுவை ஏற்படுத்த வேண்டும். இல்லையெனில், மனசாட்சி உள்ள ஒரு சிலரால் மட்டுமே பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் நிலை தற்போது உள்ளது. அடுப்படியை விட்டு வெளியே வந்த பெண்களை மீண்டும் அடுப்படிக்கே கொண்டு செல்லும் நிலையை மத்தியில் ஆளும் ஆட்சியாளர்கள் விட்டு விடுவார்கள்.

ஸ்டெர்லைட், ஜல்லிக்கட்டு என்று போராட்டம் நடத்தினோம். பெண் குழந்தைகள் பிறப்பு விகிதத்தை ஊர்ஜிதப்படுத்தும் கருத்துக் களை பேச வேண்டு. கண்ணியமான வாழ்க்கை என்பது பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கைகூட வேண்டும். குறிப்பாக, பணியிடத்தில் பாலியல் வன்முறை என்பது மனித உரிமை மீறலே.

அனைத்துத் துறைகளிலும் மருத்துவம், பொது சுகாதாரம், கல்வித் துறை, சத்துணவு, அங்கன்வாடி, ஊரக வளர்ச்சி, வருவாய்த் துறை உள்ளிட்ட துறைகளில் பெண் ஊழியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில், பணியிடத்தில் பாலியல் வன்முறை என்ற பிரச்சனை பெருகி வருகின்றது. அணி திரட்டப்பட்ட, அணிதிரப்பட்டாத துறையில் பணியாற்றும் பெண் ஊழியர்கள் பலரின் நிலைமை மாறுபட்டதல்ல. இந்தியாவில் பணியிடத்தில் பாலியல் வன்முறை சட்டம் 2013-ல் நிறைவேற்றப்பட்டது. 1997-ல் விசாகா வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வரலாற்றுக் சிறப்புமிக்க தீர்ப்பு 16 ஆண்டுகள் கழித்து தற்போது இந்தியாவில் நிறைவேற்றப்பட் டுள்ளது. இச்சட்டம் பெண்கள் வேலை பார்க்கும் இடங்களில் இது தொடர்பாக புகார் குழு அமைப்பதை கட்டாயமாக்குகிறது. மேலும், பணியிடத்தில் பாலின சமத்துவத்திற்கான பெண் களின் உரிமையை வலியுறுத்துகிறது. பணியிடத் தில் பெண்களுக்கு பாதுகாப்பையும், ஆரோக்கிய மான பணிச் சூழலையும் உத்தரவாதப்படுத்திட பல ஆண்டுகளாக தொழிற்சங்க இயக்கங்களும், மாதர் அமைப்புகளும் தொடர்ந்து நடத்திய இயக்கங்கள் காரணமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

## விசாகா கமிட்டி

மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் தலைமையில் பெண் அலுவலர்களும், அதிகாரிகளை தாண்டி 2 பேரும், வெளியில் இருந்து தன்னார்வ ஸ்தாபனத்தை சேர்ந்தவர்களைக் கொண்டு கமிட்டி போட வேண்டும். அதிகாரிகள் அல்லாத குழுவை அமைத்து நடைமுறைப்படுத்த வேண்டும். தற்போது தமிழகத்தில் பெரளவிற்கு மட்டுமே உள்ளது. ஒவ்வொரு துறையிலும் அமைக்கப்பட வேண்டும். பெண்கள் பெருவாரியாக உள்ள துறைகளில் கூட தமிழ்நாட்டில் கிடையாது. புகார் கொடுக்கும் ஊழியரை மாறுதல் செய்யக் கூடாது. பல இடங்களில் புகார் கொடுத்தாலே அந்த பெண் ஊழியருக்கு பாதுகாப்பு கிடையாது. சமரசம், மிரட்டல், மாறுதல், அவமானம் என்ற பிரச்சனை களால் நிலைகுலைந்து போகும் நிலையில் அரசு துறைகளின் செயல்பாடுகள் உள்ளது.

தமிழகத்தில் மகளிர் ஆணையம் பல ஆண்டு களாக காலிப் பணியிடமாக இருந்த ஆணையம் தற்போது கண்ணகி பாக்கியநாதன் அவர்களை நியமித்துள்ளது. அந்த ஆணையம் புகார்களை உடனுக்குடன் விசாரித்து பெண்களுக்கு நம்பிக்கையூட்டும் ஆணையமாக மாறுவதற்கு மகளிர் ஆணையத்தில் காலிப் பணியிடம் உள்ளிட்ட குறைகளை போக்கி நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். அரசியல் சார்ந்த நியமனம் என்றாலும் நம்பிக்கையை பெற வேண்டுமானால் செயல்படுத்த வேண்டும். மாவட்டங்களில் கன்னியாகுமரி, திருச்சி உள்ளிட்ட ஒன்றிரண்டு மாவட்டங்களிலே நமது அரசு ஊழியர் சங்கம் தலையிட்டு போராடித்தான் விசாகா கமிட்டியை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப் பட்டாலும் அதுவும் ஒரு கண்துடைப்பு கமிட்டி யாக இல்லாமல் எழுச்சியோடு செயல்பட வேண்டும்.

வன்முறையற்ற வாழ்க்கை என்பது தேச வளர்ச்சியின் ஒரு குறியீடு என்பதை அரசுகள் உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண் களை, குழந்தைகளை பாதுகாப்பதுதான் மத்திய, மாநில அரசுகளின் முதன்மை கடமை களில் ஒன்று எனும் நிலையில் இதனை ஆட்சி யாளர்கள் நிறைவேற்ற தவறியது பெரும் குற்றம் மட்டு மல்ல கடுமையாக கண்டிக்கத்தக்கதும்கூட. ❖

# தோழர் ஆர்.எம்.எஸ். முதலாம் ஆண்டு நினைவு தின கருத்தரங்கம்

கடலூர் மாவட்டம் சார்பாக 2.8.2018 அன்று தோழர் ஆர்.எம்.எஸ் முதலாம் ஆண்டு நினைவு






தின கருத்தரங்கம் சங்க அலுவலகத்தில் மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் வரவேற்புரை ஆற்றினார். டி.என்.ஜி.பி.ஏ மாவட்ட பொருளாளர் வி.சுந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினார். மாநில செயலாளர் என்.ஜனார்த்தனன் கருத்துரை ஆற்றினார்.




திருவாரூர் வட்டக் கிளை சார்பில் நடைபெற்ற கருத்தரங்கம் மற்றும் பணி ஓய்வு பாராட்டு விழா.

# நூற்றுக்கணக்கான முத்துக்களில் தூற்றி எடுத்த முத்து!

எளிமையாய், வலிமையாய்,
அடக்குமுறை, அச்சுறுத்தல்,
பழிவாங்குதல், பயங்காட்டுதல்
அத்தனைக்கும் துச்சமென
அஞ்சாத முத்து!

கடல் நீர் வற்றினாலும்
நெஞ்சில்...
சங்க சரிவு மங்காத
முக்கடலின் சந்திப்பில்
மூழ்கி எடுத்த முத்து!

வண்ணங்களில் இல்லை
வாழ்க்கை...
நம் எண்ணங்களில் வாழ்க்கை
என்று...
பகட்டு வாழ்க்கை வாழாமல்
உழைப்பாளி மக்களுக்கு
ஊன், உறக்கம் பாராமல்
பகை முடிக்கும், பணி முடித்த
பன்முகம் கொண்ட முத்து!

நீலநிறக் கொடி நீலவான்
நோக்கி நிமிர்ந்து
பறப்பதற்கு...
அஞ்சாலி, "உரைவீச்சு
அவரின் உயிர் மூச்சு"
என்று...

நிகழ்காலம் நிலைத்து நிற்க
நெருப்பாய் சுடராய்
நூற்றுக்கென முத்துக்களில்
தூற்றி எடுத்த முத்து!

கணவர் உழைப்பின்
உறுதி கண்டு,
உசாராண, உஷாராணி
உழைப்பை ஊக்கப்படுத்த
அவர்தம் பணியை
முன்னெடுத்துச் செல்வதற்கு
முகம் பார்த்து உதவிய
அன்பு மனைவியின்
அணையா விளக்கு.

- **சி.அடைக்கன்**, மதுரை

# தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு நினைவஞ்சலி

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி கடந்த 7.8.2018 அன்று மறைந்தார். அவருடைய மறைவுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிரம் தாழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது. அவருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அஞ்சலி மற்றும் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது.

## திண்டுக்கல்

அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் 9.8.2018 அன்று அமைதி பேரணி நடைபெற்றது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து தொடங்கிய ஊர்வலத்திற்கு ஆசிரியர் கூட்டணியின் மாவட்டத் தலைவர் ராஜேந்திரன் தலைமையேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் முபாரக் அலி, அகில






இந்திய ஆசிரியர் கூட்டணி பொதுக்குழு உறுப்பினர் மோசஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காமராஜர் சாலை, பெரியார் சிலை வழியாக மணிக்கூண்டில் பேரணி முடிவடைந்தது. பின்னர் அங்கு மெழுகுவர்த்தி ஏந்தி அனைவரும் அஞ்சலி செலுத்தினர். இதில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கரூர்

அரசு ஊழியர் சங்கம் மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் மகாவிஷ்ணன் மற்றும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட துணைச் செயலாளர் தமிழரசி தலைமையில் 9.8.2018 அன்று அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம்

8.8.2018 அன்று காலை நாகை சங்கக் கட்டிடத்தில் மாவட்டத் தலைவர்



அந்துவன்சேரல் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. இதில் அரசு ஊழியர் சங்க மாவட்ட, வட்ட, கிளை நிர்வாகிகள் மற்றும் துறைவாரி சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

### வாழ்த்துக்கள்

தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநில மாநாடு கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப் பட்டனர். தலைவராக ப.சுந்தரம்மாள், பொதுச் செயலாளராக இரா.நூர்ஜஹான், பொரு ளாளராக பே.பேயத்தேன், துணைத் தலைவர் களாக கே.அண்ணாதுரை, பா.பாண்டி, மு.தமிழரசன், ஜி.சாவித்திரி, ஆ.அமுதா, ஜெ.சசிகலா, மாநிலச் செயலாளர்களாக கி.ஆண்டாள், ஆ.பெரியசாமி, கு.சத்தி, ஆர்.அய்யம்மாள், ஏ.மலர்விழி, கே.சுபந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அனைவருக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# கண்ணீர் அஞ்சலி...



முன்னாள் பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிரம் தாழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.



10 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகராகவும் பணியாற்றிய சோம்நாத் சாட்டர்ஜி அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிரம் தாழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.



5 முறை தமிழக முதலமைச்சராக இருந்து பணியாற்றிய கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சிரம் தாழ்ந்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.



புதிய பென்சன் ரத்து, அவுட் சோர்சிங்கை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 5.9.2018 அன்று டெல்லி நாடாளுமன்றம் நோக்கி நடைபெற்ற மத்திய, மாநில அரசு ஊழியர்கள் பங்கேற்ற பேரணியில் பங்கேற்ற போது கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சத்துணவு அமைப்பாளர் பி.எஸ்.வெங்கடேசப்பா மாரடைப்பால் மரணமடைந்தார். அவருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது.

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம்

சங்கத்தின் சார்பில் ஓய்வுபெற்ற முன்னாள் நிர்வாகிகளுக்கு 18.08.2018 சனிக்கிழமையன்று மதுரை, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் "வேர்களுக்கு விழுதுகள் நடத்தும் பணி ஓய்வு பாராட்டு விழா" நடைபெற்றது. அதில் தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவருமான பி.எஸ்.அப்பர், தமிழ்நாடு கல்வித் துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் பி.ஆர்.இளங்கோ, முன்னாள் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் இரா.மனோகரன் ஆகியோருக்கு பணி ஓய்வு பாராட்டு விழா நடைபெற்றது. மாநிலத் தலைவர் அ.சேகர் தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் குறிஞ்சிவேலன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலப் பொதுச்செயலாளர் பொன்.ஜெயராம், மாநில துணைத் தலைவர்கள் திருப்பதி, மாநிலச் செயலாளர்கள் பேச்சியம்மாள், விஜயமனோகரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஜெயராஜ ராஜேஸ்வரன், மாவட்டங்களிலிருந்து வருகை புரிந்த மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் வாழ்த்துரை வழங்கினர். முன்னாள் மாநிலத் தலைவர் பி.எஸ்.அப்பர் ஏற்புரை நிகழ்த்தினார். மாநிலத் துணைத் தலைவர் சி.செல்வக்குமார் நன்றியுரையாற்றினார்.

## சத்துணவு ஊழியர் சங்கம்

தருமபுரியில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களால் அறிவிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றகோரி தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய தலைவர் ஏ.பெருமாள் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் சி.காவேரி, பொருளாளர் கே.ராஜா மாவட்ட நிர்வாகிகள் கே.சுகதேவ், வி.ஸ்ரீதேவி, பி.வளர்மதி ஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க வட்டத் தலைவர் பி.ஆனந்தராம விஜயரங்கன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதே கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டம் முழுவதும் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.



## ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம்

சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 5.8.2018 அன்று கரூரில் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட துணைத் தலைவர் ஆ.மனோகரன் வரவேற்றார். பொதுச் செயலாளர் ஆர்.ரமேஷ் வேலை அறிக்கையினையும், பொருளாளர் மா.விஜயபாஸ்கர் நிதிநிலை அறிக்கையினையும் தாக்கல் செய்தனர். அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் வாழ்த்தி பேசினார். நிறைவாக மாநிலச் செயலாளர் மு.செல்வகுமார் நன்றி கூறினார்.





## ஓய்வூதியர்கள் சங்கம்

மூத்த குடிமக்களுக்கான இலவச பஸ்பாஸ் திட்டத்தை எல்லா நகரங்களுக்கும் விரிவாக்கம் செய்து மாதம் முழுவதற்கும் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர்

சங்கம் 4ஆம் ஆண்டு மாவட்ட பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை பெரியமேட்டில் சனிக்கிழமையன்று நடைபெற்ற மாவட்ட பேரவையில் மாவட்டத் தலைவர் பி.ஏபெல் தலைமை தாங்கினார். இணைச் செயலாளர் எஸ்.ஏ.முபாரக் பாஷா வரவேற்றார். துணைத் தலைவர் வி.பிரகாசம் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். அகில இந்திய அஞ்சல் மற்றும் ஆர்எம்எஸ் ஓய்வூதியர் சங்க முன்னாள் மாநிலத் தலைவர் ந.கோபால கிருஷ்ணன் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ம.நாதன் வேலை அறிக்கையையும் பொருளாளர் ம.சந்திரன் நிதிநிலை அறிக்கையை யும் சமர்பித்தனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, தென்சென்னை மாவட்ட துணைத் தலைவர் ரகுராம், ஓய்வு பெற்றோர் நலச் சங்க மாநில நிர்வாகிகள் இரா.ஜோதி, தங்கமணி ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். மாவட்ட நிர்வாகிகள் சாராகலையரசி, வி.தேவன், நா.மனோகரன், ஜே.சி.கிளாடியஸ் டேவிட் ஆகியோர் பங்கேற்றனர். மாநில பொதுச்




செயலாளர் பி.கிருஷ்ணமூர்த்தி பேரவையில் நிறைவுரையாற்றினார். நிறைவாக என்.சி.செல்வராஜ் நன்றி கூறினார்.

## வருவாய்த் துறை கிராம உதவியாளர் சங்கம்

நாகப்பட்டினத்தில் வருவாய் கிராம உதவியாளர்களுக்கு அலுவலக உதவியாளருக்கு இணையன அடிப்படை ஊதியம் ரூ.15,700/=



வழங்க வேண்டும் ஊதியக்குழுவில வரையறுக் கப்பட்ட ஓய்வூதியம் வழங்க வேண்டும், இதர ஊழியருக்கு வழங்குவதது போல் ரூ.3000/= போனஸ் வழங்க வேண்டும், காலிப் பணி யிடங்களை நிரபப வேண்டும் ஆகிய 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 5.9.18 அன்று தமிழகம் முழுவதும் ஒருநாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு போராட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக நாகை வட்டத்தில் பணிபுரியும் 66 கிராம உதவியாளர்கள் தற்செயல் விடுப்பெடுத்து நாகை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டத் தலைவர் வி.கலியபெருமாள்



தலைமை வகித்தார். வட்ட இணைச் செயலாளர் ஏ.பாட்சா கோரிக்கைகளை விளக்கினார். மாவட்டச் செயலாளர் டி.பால்ராஜ் சிறப்புரை யாற்றினார். அரசு ஊழியர் சங்க வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். செயற்குழு உறுப்பினர் பிரகாஷ் நன்றி கூறினார்.

❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com